Page-No-365-

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 16	குரோதி ஸ்ரீ கார்த்திகை மீ	வருட சந்தா
இதழ் : 8	நவம்பர்—டிசம்பர் மீ 1964	ரூ. 3-00.

ACC. NO. 9886

பாண்டியர்க்கு உலவாக்கிழி அருளியது.

சித்திர விளக்கம் 32. பக்கம் : 340.

ACC. NO. 9886

பொருள் விளக்கம்

பக்கம்

1. ஓட்டைக் குடமும் முருகன் திறமும் (திருப்புகழ்மணி) ... 337
2. உலவாக்கிழி அளித்தது (கி. வா. ஜகந்நாதன்) ... 340
3. சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 343
4. 'வாலவய தாகி'—(இராமேசுவரம்) திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 347
5. அருணகிரிநாத சுவாமிகள் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 356
6. கொங்கணர் (ரஸபதி) ... 362
7. சிவசங்கர தேசிகன் (கி. வா. ஜ.) ... 370
8. ஒற்றுமை உயர்வு தரும் (அன்பன்) ... 374
9. நீதியும் பாசமும் (ஆ. கி. ரங்கராஜன) ... 378
10. The Eternal War (*Thiruppugal Mani*) 382

Grams: MURSOKS. Phone: 51388

" குரவணி நீடும் புயமணி நீபம்
குளிர்தொடை நீதந்(து) அருள்வாயே!"

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ட்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ஹூ கார்த்திகை மீ நவம்பர்—டிசம்பர் 1964	இதழ் 8

ஒட்டைக் குடமும்—முருகன் திறமும்

(திருப்புகழ்மணி)

சிறிய வாழ்வின் பயன் பெருவாழ்வு. உருவாய்த் தோற்றலின் பயன் அருவாம் அன்பினில் அடங்குவதே. நதியின் பயன் கடலில் கலத்தல். அறியாமையின் பயன் அறிவில் மறைவதே.

நீ வேறு நான் வேறு என்ற வேற்றுமையின் பயன், வேறாய்க் கருதிய பொருளின்பால், நீ, நானற தானாய்க் கலத்தல். மூவாசை கொண்ட பயன் தேவாசையி லடக்கம். தேவாசை-அதாவது தேவன் பக்தர்களுடன் விழையும் அன்பேதான். பக்தி என்பதுவும் காதல்தான்.

நான், தன்னை முற்றும் காய்ந்து, தான் என நின்ற மனம், காதலால் முற்றுப் பெறும். “மானாபிமானம் விடுகையிலே, தேகவிசாரம் மறக்கையிலே,

---

ஊழ்வினையால் நைந்து, உடல்மெலிந்த காலத்தும்,
வாழ்விக்கும் மெய்யருளை வாழ்த்தாரும் மானுடரோ?

ஷண்முக நாயகன் தோன்றிடுவான்." காதல் என்ற பெயர் காய்தலால் வந்ததுபோலும். தெய்வம் ஒன்றே. மானிடம் ஒன்றே. எல்லாமான ஒன்றுள் ஒன்றுவதுதான் முக்தி.

காதல் பொருள் முருகன். அவனே உலகமும் ஜீவர்களும். மானிட இடர்கள் ஏய்த்துக் காட்டு கின்றன. ஏமாறாமல், வேற்றுமையின் திறமையின் சொரூபமான இடர்களைச் சிரித்துத் தள்ளியே மனம் நிற்கின்ற நிலை மோக்ஷ நிலை. இந்நிலையில் எவ்வளவு தூரத்தில் உடல் பிரிந்தாலும், தூரம் சமீபம் அற்ற ஒன்றும் இடத்தில், கலப்பில்தான் வாழ்வு நிலைபெறுகின்றது.

மனத்தில், அன்பில், சேவையில், முயற்சிகளில், பிரபஞ்ச மெல்லாம் பிரம்மம் என்ற ஞானம் ஊறும். அந்தத் தேனினும் இனிய சீர்நிலையில வாழ்கின்ற வர்கள்தான் அடியார்கள். எல்லாம் நிறைந்து நிற்கக் குறைவில்லை. அருமைக் குழந்தைகளாகப் பக்தி பெற்றது. அப்பனின் அமுதத்தில் வளருகின்ற னர்கள் பக்தர்கள.

உடலும் சிந்தைவசம். உள்ளம்போல் உயர்வு. மனம்போல் மாங்கல்யம். ஆனதால் தாய்போல் உயர்வினில் நிற்கின்ற பேதை எனது தாயாய், தெய்வமாய் பராசக்தியாய் விளங்குகின்றாள். ஆண்டவனின் பூரண ஆசி நம்மை விட்டு அகலாது. அரூபமான பக்தியின் விளைவுகள் ரூபத்தை நாடித்

அடிசில் புனலருந்தி, அர்த்தமற்றுத் தூங்கி,
விடியா இருள்வாழ்க்கை, எற்கென்றும் வேண்டாவே.

தான் சஞ்சரிக்கும். இல்லையேல், அன்புக்கு ஆர்வ மிருக்காது. சஞ்சாரமற்ற நிலையில் நின்றுவிடும்.

ஸம்ஸாரம்—சஞ்சாரத்திற்கு, மிகவும் அனுகுண மான ஓர் நியதி. உலகமெல்லாம் எனது குடும்பம் என்று பெரியோர் உரைப்பர். அந்தக் குடும்பத்தின் நிலை ஆனந்த நிலை. அந்தக் குடும்பத்தின் கிளைகட்கு பொறுப்பாளிகள்தான் நாம். ஆகையால் ஆனந்த மாய் இருக்கலாம்.

மனம் எனும் கைகளால் பாசியைத் தள்ளிக் கொண்டே, ஆனந்தக் கடலில் மூழ்கிக் கொண்டே இருக்க வேண்டும். ஸ்ரீராதா ஆனந்தக் கடலில் ஓட்டைக் குடத்தை மூழ்க்கி நீர் எடுக்க முயன்ற காலத்தில், ஆனந்தக் குட்டையில் கண்ணன் தரி சனம் கொடுத்தான்.

ஓட்டைக் குடத்தைக் கொண்டு உலகினில் தனது பக்தர்களின் கற்பை நிலைநிறுத்தினுன் அல்லவா! மண்ணுல் அடைக்க முடியாத ஓட்டையை யெல்லாம் முருகன் தன்னுல் அடைத்து விடுவான். மனத்தில் ஏராளமாய் இடம் இருக்க வேண்டும். தனித்திருந்து முருகா முருகா என்ருல் ஆண்டவன் அருள் செய்வான். ஒருநாள் ரூபதரிசனத்தையும் கொடுப் பான். அதுவரையில் முருகா, முருகா, முருகா, முருகப்பா, முருகப்பா, முருகப்பா என்றிருப்போம். ஓட்டைகள் அடைந்துவிடும். அப்பொழுதே அம்மை யார் அருளும் அமிர்தம் தங்கிவிடும். ஓட்டைக் குடம் அம்ருத கலசமாய்த் திகழும்.

அவக்கோலம் தாங்கி அலையாமல், ஞானச்
சிவக்கோலம் ஏற்கச், சிவமுருகா செய்யாயோ!

சித்திர விளக்கம் — 32

உலவாக்கிழி அருளியது.

[கி. வா. ஜகந்நாதன்.]

குலபூஷண பாண்டியன் சோமவார விரதம் முதலிய விரதங்களை நோற்றுப் பலவகைச் சிவதருமங்களையும் புரிந்து வந்தான். அதனுல் சிறிது தருக்குற்று மறை ஓம்பும் வேதியரை அவமதித்து அவர்களைப் பாதுகாக்காமல் புறக் கணித்தான். அரசனுடைய ஆதரவு ஒன்றினுல் மட்டும் இனிது வாழ்ந்து மறைபயின்று வேள்விசெய்து அதனுல் உலகம் நலமபெறும்படிச செய்த அநதணாளர்கள் வாட்ட முற்றனர். வறுமையினுல் இன்னல் அடைந்தார்கள். தாம் ஓத வேண்டிய மறையை மறந்தனர். ஐந்து வகை வேள்வி யையும் செய்யாது ஒழிந்தனர். உயிர் வாழ முடியாத நிலை வந்தபோது இவற்றைப புரிவது எப்படி? வேற்று நாடுகளுக் குச் சென்ருர்கள்.

மறை யோதுதலும் வேள்வியும் ஒழிந்தமையால் மாரி பொய்த்தது. அதனுல் எங்கும் விளைவு குறைந்தது. பஞ்சம் உண்டாயிற்று. குடிகள் பசியினுல் வருந்தி மெலிந்தார்கள்; 'எந்த நாட்டுககுச் செலவோம்' என்று எண்ணி ஏங்கினுர்கள்.

இந்த நிலையைக் கண்ட பாண்டிய மன்னன் ஒரு சோம வாரத்தன்று திருக்கோயில் சென்று பொற்ருமரை வாவியில் நீராடிச சித்தி விநாயகரை வழிபட்டு அங்கயற்கண்ணியை வணங்கிச சொக்கநாதப் பெருமான் திருசசந்நிதியை அடைநதான். இறைவனுககு அருச்சனை செயது கொள்ள லானுன். "எம்பெருமானே, உலகில் உள்ள உயிர்களுக் கெல்லாம் நீ உயிராக இருக்கிருய் அல்லவோ? அந்த உயிர்க

எண்ணீர்மை வாக்கால், இறைஞ்சுகிற அனபர்களின்
கண்ணீர் துடைக்கும் கருணைநிலை வாழியரோ...

ளெல்லாம் இப்போது பசியால் வருந்துகின்றன. அது கண்டு அடியேன மிக வருந்துகின்றேன். இது முறையா? அடியேன் தொகுத்து வைத்த பொருள் முற்றும் சிவ தருமத்தில் செல வழிந்தது. நானும் வறுமை யுற்றேன். இந்த நிலையில் தேவரீரே திருவுள்ளத்தில் கருணை சுரந்து இந்த இடும்பையை நீக்கியருள வேண்டும்'' என்று கூறிப் போற்றினான். பாண்டியனிடம் உள்ள குறைபாட்டை எண்ணிய இறைவன் அவன் கூறியதைக் கேளாதவரைப் போல வாளா இருந்தார்.

இறைவனிடமிருந்து அருளுரை ஏதும் பெறாத வருத்தத் தால் பாண்டியன் அரண்மனை சென்று, எப்படியாவது இறைவன் திருவருள் துணையைப் பெறுவேன் என்ற உறுதி யோடு விரதம் இருக்கத் தொடங்கினான். படுக்கையில் படுக்காமல் தரையில் கிடந்து உறங்கினான். அப்போது இறைவன் ஒரு சித்த வடிவோடு அவன் கனவில் எழுந் தருளினான். சித்தர் செவிகளில் சங்கக் குழைகள் ஒளிர்ந்தன. நெற்றியில் வெண்ணீறு திகழ்ந்தது. கோவணவாடை உடுத்திருந்தார். இந்தக் கோலத்தோடு சித்தர் பாண்டிய னுக்கு அவனிடம் உண்டான குறைபாட்டை எடுத்து ஓதித் திருத்தப் புகுந்தார். ''பாண்டிய மன்னனே, நீ நம்மிடம் என்றும் பக்தி உடையவன்தான். விரதங்களை மேற் கொண்டு ஒழுகுகிறாய் என்பதும் உண்மை. தீமையைக் கடிந்து செங்கோல் ஓச்சும் திறமும் உன்னிடம் இருக்கிறது. ஆயினும் உன்னிடம் ஒரு குறையும் உண்டு. அது காரண மாகவே உன் செல்வம் குறைந்தது; நாட்டில் பஞ்சம் உண்டா யிற்று. நீ மறையைப் புறக்கணித்தாய். மறையவர்களை இகழ்ந்தாய்.

''வேதமே நம்முடைய பீடம்; வேதமே நமக்குப் பாதுகை; வேதமே நம்முடைய வாகனம்; வேதமே நம் காலில் உள்ள

பன்னினைவு கொண்டு, பதர்போலா கின்றேனை,
வின்னினைவு கொள்ளச்செய் சேர்மைமனைற வாழியரோ.

சிலம்பு; மறையையே கோவணமாகத் தரிப்போம். அதுவே நம்முடைய கண். நம்முடைய வாய்மொழி மறை. அதுவே நம் வடிவு. அந்த வேதமே நம்முடைய ஆணையாய் நின்று, விதி இன்னது விலக்கு இன்னது என்று அறிவுறுத்தி, யாவரும் தத்தமக்கு உரிய போகத்தைப் பெறச் செய்து, எல்லா உயிர்களையும் வேறு வேருகச் செய்து வைக்கும் மல நோயை மாற்றி, பேரின்பமாகிய வீட்டையும் பெறுவதற்கு உறுதுணையாக நிற்பது.

“இத்தகைய வேதங்களைப் பாதுகாத்து அவற்றுக்கு உறுதியாக இருக்கும் மறையவர்கள் மறைகளை ஓதி வேள்விகள் செய்து கலியின் இன்னல்களைப் போக்குவார்கள். நம்மைத் தியானம் செய்து நம் கடமைகளை ஆற்றுவார்கள். அவர்கள் செய்யும் வேள்வி மழையை உண்டாக்கும். அவர்களை நீ இகழ்ந்து கைவிட்டாய்; அதனால் மழை இல்லா மற் போயிற்று. இனி உலகம் வளம்பெற்று வாழவேண்டு மானால் முத்தீ வேட்கும் அந்தணரை நம்மைப்போல் எண்ணி வழிபடவேண்டும். அவ்வாறு செய்து நீ வாழ்வாயாக! உன் வறுமை போக இதோ ஒரு கிழியை வழங்குகிறோம். இது எடுக்க எடுக்கக் குறையாமல் பொன்னைக் கொடுக்கும் உலவாக்கிழி. இதிலிருந்து பொன் எடுத்துச் செய்யவேண்டிய வற்றைச் செய்து உன்னுடைய வறுமையைப் போக்கிக் கொள்வாயாக!” என்று அருளி அவன் நெற்றியில் திரு நீற்றைச் சாத்தி மறைந்தருளினார்.

எழுந்து பார்த்தான் பாண்டியன். கண்டது கனவன்று, கனவே என்று தோன்றியது. அவன் தலைமாட்டில் உலவாக் கிழி இருந்தது. மன்னனுக்கு உண்டான ஆனந்தம் சொல்லத் தரம் அன்று. அந்தக் கிழியை எம்பெருமானுடைய திருவடி

கரும்பான ஞானியருள், சாருய்க் கலந்து,
விரும்பிய பேறுதரும் வித்தகர் வாழியரோ.

யாகவே எண்ணி எடுத்துத் தலைமேல் வைத்துக் கொண்டான். கூத்தாடினான். பிறகு அமைச்சர் முதலியவர்களுக்கு அதைக் காட்டி அதன் பெருமையை அறிவித்தான்.

அப்பால் அந்த உலவாக் கிழியைச் சிங்காதனத்தில் வைத்துச் சங்க வாத்தியம் ஒலிக்க, வேதம் முழங்கப் பூசை செய்து தொழுதான். வலம் வந்து வணங்கினான்; அதன் முடிச்சை அவிழ்த்துப் பொன் எடுத்து அந்தணர்க்கு முதலில் கொடுத்து வேள்வி செய்யச் சொன்னான். பிறகு மற்றவர்களுக்கும் வாரி வாரி வழங்கினான். எவ்வளவு எடுத்தாலும் குறையாமல் இருந்தது அந்தக் கிழி. சிறிதும் கணக்குப் பார்க்காமல் நல்ல காரியங்களுக்கெல்லாம் மன்னன் பொன்னை வீசினான். இறைவன திருக்கோயிலில் பல இடங்களையும் புதுக்கிப் பொன் வேய்ந்தான்.

இவ்வாறு பல அறங்களையும் செய்து வரவே, மேகம் திரண்டு மழையைப் பொழிந்தது. எங்கும் வளம் பெருகியது. நாடு முழுவதும் வேத ஒலி மலிந்தது; ஆகமங்கள் தழைத்தன. குபேரனுக்குரிய அளகாபுரியைப் போலப் பாண்டிநாடு நலம் மலிந்து விளங்கியது.

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

முன்னுரை:

பாம்பனடிகளார் திருவாய் மலர்ந்தருளிய சிறுநூற்றிரட்டு என்ற நூலில் சண்முக கவசம் முதலாவதாகும். மூவா முதல்வனை முருகபிரான் 'ஆவிகட்கருளுதற்கே' ஆறுமுகம் கொண்டான். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மேல், கீழ் என்ற எத்திக்கும் என்னுளம் தித்திக்கும் இன்பவடிவனே சண்முகன்.

நின்னைப் பொருளாக்கிக், காகாரீ என்கின்ற
கன்னியம மேலோரை, காட்டு அருள் எம்பரனே!

கவசம்:

போரில் பகைவர் விட்டிடும் படைகள், தம்மைத் தாக்காத வண்ணம் வீரர் அணிவது கவசம். இது இரும்பு முதலிய வற்றாலானது. தன்னை அணிந்த வீரர்க்குக் கேடு ஒன்றும் நேராது காக்கும் கவசம் போன்று, பாராயணம் செய்யும் பக்தர்களுக்கு இன்னலேதும் தாராது காக்கும். மந்திர மநுவுக்கும் 'கவசம்' என்ற பேர் வழங்கலாயிற்று.

கவச இலக்கணம்:

பல வேறுபட்ட நூல் வகைகளில் கவசம் என்பதும் ஒன்று. இது தன் பெயருக்கேற்ப தலைமுதல் கால் வரையில் ஒவ்வோருறுப்புக்கும் காப்பு வேண்டுவது. மக்களுக்கு உயிரினங்களால், உறுபிணிகளால், ஊழ்வலியால், பிறவற்றால் உண்டாகும் அல்லல்களினின்றும் ஆண்டவன் காப்பு வேண்டுவது; இவ்வகை நூல்களில் ஏதேனும் ஓர் உறுப்பு கூறாது விட்டால் அது காப்புப் பெறாது. ஆதலின், கூடிய வரையில் எல்லா உறுப்புக்களையும் குறிப்பது மரபு.

சண்முக கவசம்:

கடுங் குளிருக்குக் கம்பளிப் போர்வையும், சுடு வெய்யிலுக்குக் குடையும் காலணியும் தற்காப்பாக உதவுவனபோல, நம் பசி, பிணி, பகை, மரணம் போன்றவைகளினின்று காக்க, சண்முகப் பரமனே (காப்பாக) கவசமாக அமையச் செய்தலின், இந்நூல் சண்முக கவசம் எனப்பட்டது. கந்தன் அருளையே கவசம் என்கிறார் சந்த முனிவர்.

" வேலாயுதன் சங்கு சக்ராயுதன் விரிஞ்சனறியாச்
சூலாயுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலாயுதக் கொடியோன் அருளாய கவசம் உண்டு என்
பால் ஆயுதம் வருமோ எமனோடு பகைக்கினுமே "

எனவே சண்முக கவசம் என்பது சண்முகன் அருளாகிய கவசம்

நாளென்னி எங்கும் நடந்து சலிக்காமல்
தாளென்னி வாழும் தகுதிதா தற்பரனே!

எனப் பொருள் படுகிறது. இந்நூல் போல விநாயக கவசம், சிவ கவசம், சக்தி கவசம், இடும்பன் கவசம் முதலிய வேறு நூல்களும் உள்ளன.

நூல் வந்த வழி :

இந்நூல் அருளிய அடிகளார் அதியிளமையிலேயே கந்த சஷ்டி கவசத்தை அதிற் கூறியவாறே ஒவ்வொரு நாளும் முப்பத்தாறு முறை பாராயணம் செய்தவர். அதன் பின்பே தேவராய சுவாமிகள் (கந்த சஷ்டிக் கவச ஆசிரியர்) போலே பாடவும் இறைவன்பால் வேண்டிப் பெற்றவர். ஆதலின் பிற்காலத்தில் சண்முக கவசம் பாடுதற்குரிய வித்து ஆசிரியர் இளமையிலேயே இடப்பட்டிருந்தது எனல் மிகையன்று. இநத வித்து சுமார் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குப் பின் முளைத்துக் கிளைத்துக் காய்த்துப் பழுததுப் பயனுதவியது. திருவிராமேச்சுரத்தில் கர வருடத்தில் (1891) கார்த்திகைத் திங்கள் 8ம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று அடிகளாருக்கு ஒரு அல்லல் விளைந்தது; இடரினும் தளரினும் வேலிறையையன்றி வேறெண்ணுத விரதியாகலின், இவர் ஆறுதலை யளிக்கும் ஆறுமுகனருள் காபபு வேண்டிச் சண்முக கவசம் பாடியருளினர். "ஞானிகள் விவகாரம் உலக உபகாரம்" என்பர். பாம்பனடிகள் அன்று அருளிய இந்த அருமை நூல் இன்று உள்ளூரில் பழுத்துக் கனியுதவும் பயனமரம் போல எல்லார்க்கும் சண்முகப் பரமன் தண்ணருள் வழங்கி வருகின்றது. இந்நூல் பாராயணத்தால் பயனடைந்தாரும் இன்னும் பயனடைவாரும் எண்ணிலர் என்க.

நூலின் அமைப்பு :

இது, மனப்பாடஞ் செய்தற்கு எளிதாக 'அ' கரத்திலிருந்து 'ன' கரம் வரையிலுள்ள முப்பது எழுத்துக்களை

என்னேக்கக் தன்னை எடுததெறிந்து, நின்னருளாம் தன்னேக்கம் உள்ளத்தில் தங்கச்செய் சிற்பரனே.

வரிசையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. உயிர்வருக்கமாலை, வருக்கக் கோவைபோன்ற பிற நூல்களிலும் இவ்வித நடையைக் காணலாகும்.

பாராயண முறையும் பயனும் :

இவை பற்றிய விவரம் ஆசிரியர் திருவாக்கினாலேயே கீழே தரப்படுகிறது :—

" இதனை வாற்சல்லிய விசுவாசத்துடன் நாளொன்றுக்கு ஆறுமுறை படிப்பவர்கள் எத்தகைய துன்பினின்றும் விடுதலையுறுவார்கள். முடிவில் முத்தியுமடைவார்கள். இரவில் வழி நடக்கும்போதும், வனத்தில் செல்லும்போதும், நோயான் வருந்தும்போதும், யாதானுமொரு பயங்கரமான துன்பத்தி லகப்பட்டுக்கொண்ட போதும், நித்திரை செய்ய ஆரம்பிக்கும் போதும், மரண காலத்திலும் இக் கவசம் படிக்கப் படுமாயின் யாதொரு துன்புமில்லை என்க.

* * * * * * *

கவசச் செய்யுட்களில் சிலவற்றை விட்டுச் சிலவற்றைக் கூறலும், இடையில் எவரோடேனும் பேசலும் கூடாது. முன் பின் மாறிப் படித்தலும் ஆகாது, மந்திர மாறுபாடு போல விபரீத மாகலின். தெய்வத்திற்குச் சத்தியம் (Truth to God) மருந்திற்குப் பத்தியம் (Diet for Medicine) முக்கியம். இந்நூலைச் சத்தியமான பக்தியுடன் பாடினால் சண்முகநாதன் அருள் உதவுதல் உறுதி. கார்த்திகை மதியில் கவசம் பாடப் பட்டது. அதற்கு, அடுத்த (கார்த்திகை) இதழில் உரை வகுப்பது பொருத்தமல்லவா ?

" செத்துப் பிறக்கும் தொழிலு மின்றேடு தொலைவதொடு
சித்திக்கும் எண்ணிய தெல்லாம் சிவகுரு சீர் அருளால்
சத்தியம் பாம்பன் சுவாமிகள் பாத சரணமலர்
பத்திதரும் சண்முக கவசத்தைப் படி மனமே."

இமைப்பொழுதும் என னறிவில் நீங்கா(து) இருக்கும்
அமைப்பைப் பத்துத் தலையெழுத்தா ஆக்கிவைக்க மாட்டாயோ.

இராமேசுவரம்
திருப்புகழ் விரிவுரை
(குகஸ்ரீ)

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கேடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேயுழல சிலநாள்போய்த்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ;
தாலுமுக னாதியரி யோமெனஅ தாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே!
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீனமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா!
ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீள்பக னொடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவெ
யோதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமானே!

கோல்காட்டி ஞாலமாள் கோபதிபோல், நின்ஞானக்
கால்காட்டி, இன்றென்னை யாளக் கருதுதியோ?

(பதவுரை.) (நாலுமுகன்..................இனையோனே !)

நாலுமுகன் - (நான்கு திசைகளை நோக்கும்) நான்கு முகங்களை யுடையவனும் ;

ஆதி அரி ஓம் என அதாரம் உரையாத பிரமாவை விழ மோதி - (மந்திரங்கட்கு) முதலான ஹரிஓம் என்று ஓதி, (அதற்கு) ஆதார (நுட்ப)ங் கூற அறியாத (பெரியோன எனப் பெறும்) பிரமனை (த்தடுமாறி) விழுமாறு தாக்கி ;

[ஆதாரம் என்பது, சந்த இன்பம் கருதி அதாரம் என முதற் குறைந்தது.]

பொருள் ஓதுக என - (உரிய) பொருளை யாயினும் உரை என்று (உருத்து) உரைத்து, (அதையும் கூற அறியாமையால்);

நாலு சிரமோடு சிகை தூளிபட தாளம் இடும் இளையோனே - (குறித்த) நான்கு தலைகளுடன் குடுமியும் நைய, தாளம் (இடுவது) போல், குட்டிய இளங்குமரா!

(நாறு இதழி.....................மயில்வீரா!)

நாறு இதழி வேணி சிவரூப கலியாணி முதல் ஈண் - மணம் கமழ் கொன்றை மாலை யணிந்த சடையுடைய சிவனுர் திருவுருவ மங்கலையான மாதேவி முதலில் அருளிய ;

அ மகவு ஆனை மகிழ் தோழ - அகரப் பொருளாம் (அருள்) மகவான (தூய) யானைமுக கணபதி மகிழும் துணைவா!

வனமீது செறி ஞான குறமாதை - வனத்தில் உறையும் நிறை ஞானக குறமகளான (அக்) கோமளையை ;

தினை காவில் மணம் மேவு புகழ் மயில் வீரா - தினைப்புனச் சோலையில் (புது) மணம் புணர்ந்த புகழுடன், (விந்து தத்துவ) மயிலூரும் வீர விளைவினனே !;

கல்லைப் பிளப்பார், கருங்கடலைத் தூர்த்திடுவார்;
வல்லாளா! நின்னருள் வாய்க்குநெறி கண்டிலரே.

(ஓலம் இடும்.....................அமரர் பெருமாளே !)

ஓலம் இடு தாடகை - (அதி பயங்கரக்) கூச்சலிடும் (அரக்கியான) தாடகை ;

சுவாகு—, வளர் ஏழு மாமரம் - (வானளாவி) வளர்ந்த ஏழு மராமரங்கள் ;

வாலியொடு—, நீலி - நிலநிற சூர்ப்பணகை; பகனொடு—, ஒரு விராதன்—,

ஏழு மோத கடலோடு - (கலகலத்து) எழுந்து ஆரவாரிக்கும் கடலுடன் ;

விறல் ராவண குழாம் அமரில் பொடி ஆக - விறுடைய இராவணன், (அவன் இனமான அரக்கர்) கூட்டங்களுடன் (புரிந்த) போரில் பொடிபட்டு அழிய ;

ஓகை தழல் வாளி விடு மூரி தநு - குதூகலித்துக் கனல் (மயமான) கணைகளை ஏவும் கோதண்டம் ;

நேமி வளை பாணி திருமார்பன் - (சுதர்சனம் எனும்) சக்கரம், (பாஞ்ச சன்யம் எனும்) சங்கு (முதலியவைகளை) ஏந்தியவரும் ;

அரி - பகைமை (நினைவைக்) கெடுப்பவருமான ;

கேசன் மருகா எனவே ஓத - கேசவர், மருகனே என்று இடையறாது விளிக்க ;

மறை ராமெசுரம் மேவு குமரா - நான்மறை நாதத் தலமான இராமேச்சுரத்தில் விரும்பி எழுந்தருளிய குமரேசா !

(வாலவயதாகி.................உடல் அழிவேனோ ?)

வால வயது ஆகி - (கட்டுக் கோப்பான) காளைப் பருவம் எய்தி ;

அழகு ஆகி - (வரவர) அழகு வளர்ந்து;

ஆக்கம் பெறுவார், அலைகடலும் தாண்டுவ(ர்;)உன்
நோக்கம் அறியார், நுடங்குகின்றார் என்னேயோ? ட

மதன் ஆகி - (வேனிற்கால) மன்மதன் போல் விளங்கி;

பணி வாணியமொடு ஆடி - பண்ணும் வாணிபத்தில் (பாதக) விளையாடல் பல புரிந்து;

மருள் ஆடி - (அநியாய) மயக்கில் ஆழ்ந்து;

விளையாடி - (அவ்வழியில்) பல ஆடல் புரிந்து;

விழல் வாழ்வு சதம் ஆகி - விரையம் ஆகும் வாழ்வு இது என்றுமே இருக்குமென்று எண்ணி;

வலு ஆகி - மனோ தைரியத்துடன்;

மட கூடமொடு பொருள் தேடி - மாட மாளிகைகளுடன் பணம் திரட்டும் படலம் பலவும் நடத்தி;

[*மாடம் என்பது, மடம் என்றுயது. மாடம் - மேல் மாளிகை. கூடம் - கூடு போல் விசாலித்த உள் இடம்.*]

வாச புழுகு ஏடு மலரோடு மனம் ஆகி - (புது) மணம் கமழும் புனுகுடன், இதழ்களை யுடைய மலர்களில் மனம் செலுத்தி;

மகிழ் வாசனைகள் ஆதி இடல் ஆகி - (புதுப் புது) வாசனைப் பொருள்கள் முதலியவைகளைப் பூசி (ரசிக்கும் போக்காகி);

மயல் ஆகி - (வர வர) மையல் வளர்ந்து:

விலை மாதர்களை மேவி - (உடலை) விலை கூறும் (வீணான) கணிகையரை (மென் மேலும்) விரும்பி;

அவர் ஆசைதனிலே உழல - அவர்மேல் விளையும் ஆசையாம் சுழற்காற்றில் அலை மோதி;

சில நாள் போய் - (இப்படியே) சில நாள்கள் அகன்று;

தோல் திரைகள் ஆகி - (வனப்புள்ள) தோல் வற்றிச் சுருங்கி;

மூர்த்திகளும், வாழும் முதலிகளும், நின்னருளைப் பூர்த்தியாய் எந்தப் புகழ்வதுவும் கண்டேமே

நரை ஆகி - தலை மயிர்கள் வெளுத்து ;

குருடு ஆகி - கண்கள் இரண்டும் குருடாகி ;

செவி மாறி - (செவிகள் இரண்டும்) செவிடுபட்டு ; பசு பாச பதி சூழ் கதிகள் மாறி - உயிர்ப் போதம், உலக அறிவு, இறை ஞானம் என்பவைகளைக் குறித்து, மனனம் செய்து கற்ற யாவும் மறந்து போய் ;

சுகம் மாறி - (மாபெரும்) சுகம் என்பவை மாறுபட்டு ;

தடியொடு திரியுறும் நாளில் - தடி யூன்றித் திரியும் (அவதி மிகுந்த) அந்த நாளில் ;

சூலை - சூலை (நோய்) ; சொறி - நமை (நோய்) ; ஈளை - கப (நோய்) ; வலி - வலிப்பு (நோய்) ; வாதமொடு - வாத நோயுடன் : நீர் இழிவு—, சோகை (நோய்)—, களமாலை - கண்டமாலை (நோய்) ; சுரமொடு—, பிணி தூறு இருமல் சூழல் உற - கூறுபட்டுக் கொல்லும் இருமல் முதலிய நோய்கள், (படர்ந்து) உடல் முழுதும் பாதிக்க ;

மூல கசுமாலம் என நாறி—(எல்லா நோய்க்கும்) மூல காரணமான ஆபாசம் எனும்படி நாற்றம் அடைந்து ;

உடல் அழிவேனோ - (அடியேன்) உடலம் இப்படியே பொசுங்கிச் சிதைந்து போவேனோ ? (பயமா யிருக்கிறதே, (எ - று).

விரிவுரை.

நான்மறை ஓதுவார் நான்முகர். ஓதும்போது நாதம் உதிக்கும். நாத அலை, உம்பரில் இருந்த உயிரணுக்களை உந்தும். அங்ஙிலையில் அவ்வுயிர்கள், தம்தம் கன்மத்திற்குத் தக்கபடி, தாவி யழைக்கும் கருக்களில் தங்கும். இதுதான், தனிப்பெரும் படைப்புத் தத்துவம். பங்கயன் உலகைப் படைக்

கொல்லன் உலைபோல் கொதிக்கின்ற புல்லறிவை,
நில்லென்று நீக்கி, நிறைஞானம் தாராயே.

கின்றான் என்பது உபசாரம்; அத்தொழிலிற்கு ஒரு கருவி அவர். அவ்வளவுதான் செய்தி.

எனினும், அவர்தம் பதவி பெரியது. அதனால் பெரி யோன் எனும் பொருள்தரும் பிரம்மா எனும் பெயரைப் பெற்றவர் அப் பெருந்தகை.

பதவி காரணமாக, சில சில சமயங்களில் செருக்குப் பிறக்கும். அதற்குரிய அவதியையும் அவர் இடையிடை அடைவார். ஒரு சமயம், கர்த்தா நானே என்று கர்வித்தார்.

அதை நீர் அறிந்தீர். அழைத்தீர். ஓதுக வேதம் என்று ஊக்கினீர். அவர் ஹரி ஓம் என்று ஆரம்பித்தார்.

நிறுத்து! அந்த ஹரிஓம், எதனி லிருந்து எழுகிறது என்று வினவை எழுப்பினீர்.

ஆதாரம் கூற அறியாமல், பிரமதேவர் வேதனை எய்தி விழித்தார். அது இருக்கட்டும். ஹரிஓம் என்பதன் பொருள் யாது? அதையேனும் கூறுக என்று மேலும் வினவினீர். அகர முதலா யிருக்கும் நானே பொருள். இப்படி, நம்பியுளன் நான் என்றார் அந்த நான்முகர்.

இந்த அழகிற்கு இறுமாப்பு வேறு என்று, தலையில் குட்டி அவரைச் சிறையில் தள்ளினீர். இது, மாணவரிடம் குரு நடந்து கொள்ளும் மரபு. பெரியோன் ஆன பிரம்ம தேவரை, இளையோன் ஆன நீர் செய்த செயலிது. அதனால்தான் உம்மை,

'நான்முகன்......சிகை தூளிபட தாளம் இடும் இளையோனே'! என்று, ஏத்திப் போற்றி உலகம் இறைஞ்சுகிறது.

மகத்தான கொன்றை மாலையார். மெய்ம்மை ஜோதி மேனியார். அருளின் வடிவம் ஆனவர் சிவபிரான். இரு

தள்ள முடியாத சேட்டையெலாம் தாமழிய,
மெள்ளவந்தென் உள்ளத்தில் மேவியிரு, எம்மானே.

மையில் ஒருமை தோன்ற, அவர் உருவில் ஒன்றிய உமா தேவி, 'சிவரூப கவியாணி' எனப் பெறுவர். அத்தேவியின் மூத்த குமாரர், அகரப் பொருளாம் அறிவின உருவர். அவரை ஆனைமுகர் என்று அகில உலகும் ஆராதிக்கின்றது.

அகப்பொருள் இலக்கணத்தில், பாங்கன் துணையால் தலைவியை அடைதல் என்று ஒரு துறையுளது.

ஓம் பொருள் ஆய்வில் அயனைச் சிறையில் அடைத்த நீர், ஓம் உருவக் கணபதியைப், பாங்கன் ஆகப் பயன்படுத்திக் கொண்டீர்.

தினைப்புனஞ் சென்றீர். புறக்கோலம் குறவர் குலம். அகக்கோலம் ஞானகுலம். அத்தேவியிடம், 'ஓம் எனும் உபதேச வித்தோடு' உறவு மணம் கொண்டீர்.

ஓம் எனபது, விந்து சக்தியின விளக்கம். தடத்த நிலையில் அது மயில் உருவம் தாங்கும். அண்ட சராசரம் அத்தனையு மாகி ஆரவாரிக்கும் அதனை, ஏறி நடத்தும் இயல்புள உம்மை, 'வீரா!' என்று விளிபபம் யாம்.

தரணி நடுங்கக் கூச்சல் இடுபவள் தாடகை. அவளும், அவள் மகன சுபாகுவும், ஆற்றிய அக்கிரமங்கட்கு அளவில்லை.

கலியுக முழுமைபோல, அளவிறந்த அபராதி ஆயினன் விராதன் நீலியான சூர்ப்பனகை, வறள்விக்கும் சாகஸங்களை வளர்த்தவள். ஏழு மராமரம், இறுமாந்து உயர்ந்தது.

நீதியின் வேலியை வாலி அழித்தான். பகன் செய்த பரிபவஙகள் பல. கயவர்க்குக் காபபளிததது கடல். இரா வண கூட்டம் விளைவிதத இடர்கட்கு, எல்லையே இல்லை.

தொல்லை இவைகளைத் தொலைக்க நினைத்து, கனல் கக்கும் கணை கொண்ட கோதண்டம், சஙகம், சக்கரம், தண்டு, வாள் எனும் ஐம்படைக கரததர் ஆயினர் நாரணர்.

சேய்செய்யும் சேட்டைபோல, சிநதை தவறுசெயில்
தாய்போல் பொறுக்கும் தகவுடையன் நீயன்றோ.

அதே நேரத்தில், அகில உலகையும் அளிக்கும் மலர் மகள் மருவிய மார்பினர் ஆயினர் அவர்.

அரிய பகைமையை அழிக்கும் அவரை, ஹரி என்பம். கேசம் என்பது மயிர் முடி ; கேச அழகு உடைய அவரைக் கேசர் என்பம். மேலும், கேசி எனும் அசுரனை அழித்தது பற்றியும் கேசர் என்பம்.

க - பிரமன் ; ஈச - உருத்திரன் ; இந்த இருவரையும் இருபுறம் இருத்திய காரணத்தாலும், கேண்மையுள அப் பெருமானைக் ' கேசவர் ' என்பம்.

ஊற்று நீர்போல், வேத ஓதங் கொண்ட நிலம் ' இராமேச்சுரம் '. அப்பதியில், அடியவர் முருகா முருகா என்று அழைப்பர் ; ஹரிகேசவரோ, மருகா ! மருகா என்று உம்மை ஆர்வமொடு அழைத்துக் கொண்டே இருக்கும் அருமையே அருமை.

மற்று, ஹரிகேசன் மருகா என்று அத்தலமும் அழைக்கும்; ஹரிகேசன் மருகா என்று அரிய மறைகளும் அழைக்கும். அற்புதமான இராமேச்சுரம் எனும் அப்பதியில், ' குமர ' கோலத்தில் என்றும் குலவி யிருக்கிறீர் !

அமைதியர். அமுதமுண்ணும் வாழ்க்கையர் விண்ணாட்டு ' அமரர் '. அப்பெயர்க்கே பொருள் அதுதானே. பெரியோர் ஆன அவர்கள் போற்றும் பெருமையனே ! உம்மை, ' அமரர் பெருமாளே '! என்று ஆவலித்து அழைக்கிறது எமது அகம். பெரும ! கேண்மையேன் விண்ணப்பம் கேட்டருளும் !

பிறப்பது. வளர்வது. வாலிப வயதை யடைவது. இயற்கை செயற்கை யழகால் இறுமாப்புறுவது. வழியலா வழியில் பொருளை வளர்ப்பது. பணமும் பருவமும் பலித்த பொழுது, மருளும் பாழும் மனம். இங்கிலை என்றும் இருக்கும்

இன்னும் பொறுக்க, இயலா எமதிறைவா!
முன்வா! முகம்பார்! முதன்மையருள் தாராயே !

என்று ஏமாறுவது. காயம் வலுக்க, ஆன முயல்வு அனைத்தும் செய்வது. வர்சனைத் திரவியங்களை வாரிப் பூசுவது. வாசனை மையலை வளர்க்க, விலைமகளிரைத் தேடி வீதியில் உழல்வது. ஆடத் தகாத ஆட்டமெல்லாம் இப்படியே ஆடி, அதன் பயனுகக் கொழுமை கரைந்தபின், இஞ்சி தின்ற குரங்காய் இளிப்பது. அட பாவமே!

வனப்புக் காட்டிய தசைகள் வறள்வது. கண் குருடு. காது செவிடு. கால் தள்ளாடல் ஆவது.

உலகம், உயிர், கடவுள் என கற்றுக் கடை விரித்த எல்லாம், ஒன்றொன்றாய் மறப்பது. இன்பம் என்பன இனி யில்லை. துன்பமே சொந்த தொந்தம்.

தடி ஊன்றி நடக்கும் சங்கடம் சார்வது. இந்த நிலையில், சூலை, நமை, கோழை, வலிப்பு, வாதம், நீரிழிவு, சோகை, கண்டமாலை, ஜுரம், இருமல் ஆதிய பிணிகள், வந்தேன் என்று ஆரவாரித்து வருவது.

என்ன சங்கடமான சூழ்நிலை! பழைய கசுமாலம் என்று பார்த்தவர் அருவறுத்துப் பகருமாறு, ஆக்கை நாற்றம் அடிக்க, அநியாய மரணம் அடைவது ஆ! நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறதே. இதுதானு உலகம்!

நின்னை நினையாமல், நேர்மை நிறையாமல், வாக்கு மனம் காயத் தூய்மை வளராமல், உலகாயதராகி இப்படி உலகர் அழிகின்றனரே!

வழிமுற்ற வழுவிலன். நின்னை நினைந்தேன்! நியதியில் நிலைத்தேன்! உலகர்போல் ஒழியேன்!

இளையோனே! தோழா! மயில்வீரா! பெருமானே! கா ஐயா! கா அரசே! கா துரையே என்று கதறியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

இழுக்கமுள நெஞ்சன், இரக்கமிலன் என்று,
பழுக்கவைக்க, இவ்யாக்கை பாலித்தாய் ஐயாவே!

அருணகிரிநாத சுவாமிகள்

[வழுவூர் முதல் விஜயபுரம் வரை]

(தலங்கள் 32—34)

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

திருவிடைக்கழிப் பெருமானைப் பரவி வீழ்ந்தெழுந்து அவரிடம் பிரியா விடைபெற்றுத் தாருகாவன இருடிகள் ஏவிய யானையைச் சிவபிரான் உரித்த தலமாகிய [1]வழுவூரை **(32)** அடைந்து திருக்கோயிலுக்குச் சென்று, அங்குக் கந்தவேளின் சந்நிதி முன்னின்று செங்கரங்கூப்பிக் கண்ணீருகப் பெருமானுடைய திருத்தாளைத் தொழுது, முன்னர் அவர் தமக்குத் திருவடி தீக்ஷை செய்து மயில்மீது தமக்குக் காட்சி தந்து ஞானோபதேசம் செய்து உதவியதைத்

> "தலைநாளிற் பதம் ஏத்தி, அன்புற உபதேசப் பொருள் ஊட்டி, மந்திர தவஞானக் கடலாட்டி என்றனை......முத்தமிழூட்டி கதிர்தோகைப் பரிமேற்கொளும் செயல் மறவேனே" (814)

என நன்றி பாராட்டிப் போற்றினர்.

அத்தலத்துப் பிறிதொரு பாடலாகிய "தருவூரிசை" **(813)** என்னும் பாடல் மிக அருமையான பாடல். மனப்பாடத்துக்கு உரியது. அப்பாடலில,

---

1. இது தேவார வைப்புத்தலம். அட்டவீரத் தலங்களுள் ஒன்று. மாயூரம்—திருவாரூர் வழியில் உள்ள மங்கைநல்லூர் ஸ்டேஷனுக்கு ஒருமைல் தூரத்தில் உள்ளது. இலந்தங்குடி ஸ்டேஷனுக்கு மேற்கு ¼ மைல.

> காமக் கனலில் கருத்தழிந்து சாயா(து)உன்
> நாமம் உருவேற்றி, நான்வாழ நல்காயே.

"[1] புருகூதன் மிகுளொரு பாலுற
சிலைவேடுவர் மானொரு பாலுற
புதுமாமயில் மீதணை யாவரும் அழகோனே"
" மகதேவர்பு ராரிச தாசிவர்
சுதராகிய தேவசி காமணி
வழுவூரில் நிலாவியெ வாழ்வருள் பெருமாளே"
என முருகவேளை விளித்து,

" கனிவீறிய போதமெய்ஞ் ஞானமும்
இயலார் சிவநேசமு மேவர
கழல்சேரணி நூபுர தாளிணை நிழல்தாராய்"

என வேண்டுகின்ற வேண்டுகோள் நெஞ்சக் கனகல்லையும் நெகிழ்ந்துருகச் செய்யும் தன்மையது. இதில் [2]புதுமாமயில் எனவருவது ஓர் அருமைப் பிரயோகம். புதுமை என்பதற்கு எழில், அதிசயம் எனவும் பொருளுண்டு.

வழுவூர்ப் பெருமானிடம் விடைபெற்று [3]கந்தன்குடி (33) என்னும் தலத்தைச் சார்ந்தார். அங்கு அவர் பாடிய "எந்தன் சடலம்" (805) எனத் தொடங்கும் பாடலில் தமிழ்ச் சங்கத் தலைவராம் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையைக் கேட்டு அவர் உய்ந்திடச் செவ்வேள் எழுந்தருளியதை,

---

1. புருகூதன் - இந்திரன்.

2. "புதுமயில் ஊர்ப்பரன் புராணம்"—கந்தபுராணம்—அவையடக்கம் (13); "புதிய மயில் ஏறு கந்த"—திருப்புகழ் (142).

3. இத்தலம் பேரளம் ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல். அம்பகரத்தூர் ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல்.

என்றும் உலகியலில் ஏதங்கள் எய்தாமல்,
அன்றுலின் கீழிருந்த அண்ணல் அருளுதியே.

"கந்தன் குகன் என்றன் குரு என்றுந்தொழும்[1]அன்பன் கவி
கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே"

எனப் பாராட்டி யுள்ளார்.

பின்னர் அங்கிருந்து [2]திலதைப்பதி (34) என்னும் தலத்தை யடைந்து மூன்று பாடல்களைப் பாடினர். அவற்றுள் "மகரக்குழை" (808) என்னும் பாடலில் "பெருமானே! நான் உலகோர் புகழைப் போற்றாது உன் அருமைத் திருப்புகழைச் சொல்லித் திரியும் பணியையே வேண்டுகின்றேன்" என்னும் கருத்தை

"உலகப் புகழ்ப்புலம்பு கலியற் றுணர்ச்சி கொண்டுன்
உரிமைப் புகழ்பகர்ந்து திரிவேனோ"

என்னும் அடியில் விளக்கி யுள்ளார்.

திலதைப்பதியினின்றும் புறப்பட்டு சோமாசிமாற நாயனாருக்கு உரிய தலமாகிய [3]அம்பர் (35) என்னும் தலத்தை யடைந்து, முருகவேளின் குழந்தைத் திருவிளையாடல்களை அத்தலத்துச் "சோதிமந்திரம்" (809) என்னும் திருப்புகழில் சிறப்பித்துப் பாடினர்; அங்கிருந்து அம்பர் மாகாளத்தை (36) அடைந்து குருநாதா! நான்

"நிதமும், நாதா குமார முருகா எனவும்
ஓத அருள்புரிவாயே"—திருப்புகழ் (810)

என வேண்டித் துதித்தனர்.

---

1. அன்பன் - நக்கீரர்.

2. இத்தலம் 'கோயில்பத்து' என வழங்கும். சம்பந்தர் தேவாரம் பெற்றது. பேரளத்திலிருந்து 3½ மைல்.

3. இது பேரளம் ஸ்டேஷனிலிருந்து 3½ மைலிலுள்ள அம்பர் மாகாளத்திலிருந்து ½ மைல் தூரத்தில் உள்ளது. சம்பந்தர் தேவாரம் பெற்றது.

போட்டஇடம் தேடில் பொருள்கிடைக்கும் என்பதுபோல்,
நாட்டத்தில் உன்னை, நணுகஅருள் நம்பரனே!

அங்கிருந்து [1]இஞ்சிகுடி (37) என்னும் தலத்தைச் சேர்ந்து அங்கு அருளிய பாடலில்

"எங்கு நினைப்போர்கள் நேச! சரவண!
சிந்துர கற்பூர ஆறு முககுக
எந்தனுடைச் சாமி நாத வயலியிலுறை வேலா!" (811)

என அருமையாக ஆண்டவனைப் புகழ்ந்தார்; 'எங்கு நினைப் போர்கள் நேச' என்றதனால் எந்த தேசத்தில் இறைவனை நினைப்பினும் அங்ஙனம் நினைப்போர்க்கு நேசன் முருகன் என்பது பெறப்படும். இது [2]"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன் அடியார்க் கிங்கே யென் றருள்புரியும் எம்பெருமான்" எனவரும் ஸ்ரீசம்பந்தர் தேவாரத்தை நினைவூட்டுகின்றது.

இந்தத் திருப்புகழில் இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் யுத்தகாண்டம் இவைகளின் சுருக்கத்தைக் காணலாம்.

பின்னர் மூவர் தேவாரம் பெற்ற திருநள்ளாறு (38) என்னும் தலத்தை அடைந்தார். ஞானசம்பந்தப் பெருமான் அன்றி வேறு தெய்வமே கிடையாது. "கழுமலங்கற்கு உரைத்தோன் அலதில்லை தெய்வங்களே"--[கந்தரந்தாதி-29] என்னும் கொள்கையைக் கொண்ட அருணகிரியார் இத்தலத்துத் தேவியார் "போகமார்த்த பூண்முலையாள்" எனு திருநாமங் கொண்ட திருப்பதிக ஏடு அல்லவா அன்று சம்பந்தப்பெருமான் சமணரொடு வாதுசெய்து நெருப்பிலிட்ட பொழுது வேகாது பச்சையாயிருந்ததென் று ஞாபகம்வரத், தமது பாடலையும் தேவியின் திருமுலை வர்ணனையாகப் "பச்சை யொண்கிரி போலிரு மாதனம்" (812) எனத்துவக்கி, அத்தேவியின்

1. இத்தலம் பேரளம் ஸ்டேஷனுக்குச் சமீபம்.
2. சம்பந்தர் - பிரமபுரம்—II—40—6.

கன்றுதன் தாய்மடியின் காம்பையே காண்பதுபோல்,
என்றுவரும் நின்னருளென்(று,) ஏங்குவதை எண்ணுயோ ?

பெருமையை அப்பாடலின் முதல் நான்கு அடிகளில் வெகு நன்ருகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பின்னும், இப்பதிகத்தில் "சித்தர் விஞ்சையர் மாகர் சபாஷென" என்னும் அடியில் "சபாஷ்" என்னும் பதம் வந்திருப்பது கவனிக்கற்பாலது; இதனுல் இவர் காலம் மகம்மதிய ராஜ்ய காலம் வந்த பிறகு என்பது ஏற்படும்.

திருநள்ளாற்றை விட்டுக் [1]கன்னபுரத்தைத் (39) தரிசித்தார். வள்ளியை இராப்பொழுதின் பிற்பாகத்தில் (பொழுது விடியாமுன) களவில் கன்னமிட்டுக் கொண்டுபோக ஒரு கற்குகையில் கற்சிலேபோல் அசைவற்று வேர்வையுறக் காத்திருந்தனர் முருகவேள் என்பதை இத்தலத்துப பாடலில்

"கன்னமிடப் பினனிரவிற் றனனுபுரைக் கனமுழையிற்
கன்னிதுயிற் புகர்வேர்த்து—நின்றவாழ்வே"

[திருப்புகழ் 815]

என அருமையாக விளக்கியுள்ளார்.

பின்னர், கன்னபுரத்தினின்றும் புறப்பட்டு திருமருகல் (40) முதலாய தலங்களேத் தரிசிததுத் தம்மை ஆட்கொண்ட முருகவேள் வீற்றிருக்கும் தலம் எஙகெங்குளதோ அங்கெல்லாம் சென்று பெருமானுடைய பொனனங்கழலைப் பரவித் திருச்செங்காட்டங்குடியைச் (41) சேர்ந்தனர். சிங்காரவேல் முருகன் வீற்றிக்கும் சந்நிதியை அடைந்து, சிந்தை மெய் கனிந்து இறைஞ்சி

"வங்காரம் மார்பிலணி" (817) எனத் தொடங்கும் பாடலேப் பாடி, அப்பாடலில்

---

1. இத்தலம் நன்னிலம் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் உள்ள கண்ணபுரமாய் இருக்கலாம்.

துறையறியேன், தொல்லேக் கடலில் துளேவேன்;
கரைகாட்டு வாயென்று கன்றுதலேக் காணுயோ?

"சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தா குமாரசிவ தேசிக நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோநமென விருதோதை
சிந்தான சோதிகதிர் வேலவ நமோநமென
கங்காள வேணி குருவானவ நமோநமென"

என ஐந்துமுறை "நமோநம" வரும்படி அமைத்தும், சிறுத் தொண்ட நாயனுர் பிள்ளைக்கறி அமுது அளித்த பெருந் தொண்டைச் சிறப்பித்தும் மகிழ்ந்து ஓதிப் பரவினர்.

அங்கிருந்து [1]திருவிற்குடியை (42) அடைந்தார். இத் தலம் அட்டவீரத்தலங்களில் ஒன்று. சலந்தராசுரனைச் சிவபெருமான் சங்கரித்த தலம். "சித்திரத்திலு மிகுத்த" (திருப்புகழ் 818) எனத் தொடங்கும் பாடலைப் பாடி, அதில், பிரமன் முடியைக் குலைத்து அவனைச் சிறை வைத்ததைக் கூறி மகிழ்ந்தார்.

திருவிற்குடியினின்றும் திருவாரூர் ரயில் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள விஜயபுரம் (43) என்னும் தலத்தை அடைந்து, அத்தலத்துப் பாடல் "குடல் நிணம்" (819) என்னும் திருப் புகழின் ஈற்றடியில் அத்தலத்தை "வடவிஜயபுரம் எனக் குறித்துள்ளார். அருணகிரியார் காசி முதலிய வடநாட்டுத் தலங்களைத் தரிசித்தனர் என்பதை அவருடைய பாடல்கள் (655—659) தெளிவாக்குகின்றன. ஆதலின் "வடவிஜய புரம்" என்பது விஜயவாடா (பெஜவாடா) என இப்போது வழங்கும் தலமாய் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இங்கே மலைஅடிவாரத்தில் அறுமுகனுர் கோயில் ஒன்று இருக்கின்றது. அருட்கவி சேதுராமனுர் அந்த முருகரைத்

1. இத்தலம் திருவாரூருக்கு அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷன். சம்பந்தர் தேவாரம் பெற்றது.

கடலில் சிறுதுரும்பாய்க் கண்கலங்கும் என்றன்,
உடலிற் புகுந்துநீ, உய்யவழி ஓதுதியே!

(22-8-1954] தேதியில் தரிசித்தபொழுது பின்வரும் அடிகள் அவர் பாடலில் உதித்துள.

1. "அஜவாகன லக்ஷண உத்தர
விஜயாபுரி மெத்தவு மெச்சிய மந்தகாசா"

2. "கிருட்டிணாநதி நீளலை மோதிட
வடக்கில் வாழ் விஜயாபுரி மேவிய பெருமாளே!

மேலும் இந்த வடவிஜயபுரத்தைத்தான் அருணகிரியார் பாடியுள்ளார் என்பதும்—

" அருணகிரி பரவுமலை அடிவாரத்
தறுமுகவ விஜயபதி மருகோனே
வருமடியர் தொழுதமயில் மிசையோனே!
வடவிஜயபுர மருவு பெருமாளே "

எனவரும் சேதுராமனுர் வாக்கால் தெளிவாகின்றது. வடவிஜயபுரத்துப் பெருமானைக் கைகுவித்து உடல் பொடிப்புறத் தொழுது திருவாரூரை அடைந்தார்.

சித்தர்கள் சிறப்பு

கொங்கணர்

[ரஸபதி]

மேலைக் கடற்கரையில் உளது கேரளம். அதன் வடபால் உளது கொங்கணம். அபபதியில், புண்ணியம் செய்தது புளினர் குலம். சித்திரை மாத உத்தர நட்சத்திர முதற் பாதத்தில், அக்குலத்தில் பிறந்தது ஒரு பிள்ளை. வளர்பிறையெனச் சிறுவர் வளர்ந்தார். மரபினர் வழிபட்ட மாரியம்மனை, நாடோறும் வணங்கினர்.

பாய்மரத்தால் ஓடம், பலதுறையில் ஓடுதல்போல்,
நாய்மனத்தால் வாழ்க்கை நலிவுறுதல் ஓராயோ?

ஆவடு துறையில், புனித போகர் போகர். அவர், பலரை வாழ வைத்தவர் என்று அறிந்தார். புறப்பட்டார். பலநாள் நடந்தார். காலைக் கதிரவன் உதயம் ஆயினன். ஆசார்யா ! அடியேன் அடைக்கலம் என்றார். அந்த ஓசை கேட்டு, கண் விழித்தார் போகர்.

ஸ்வாமி ! அடியேன் தேவிதாஸன். அவள் அருள் பெறு வழியை அறிய விழைகிறேன் என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தார். கொங்கண தேசத்தில் இருந்து வந்த அவர்க்கு, போகர் கொங்கணர் என்றே பேரிட்டார்.

சக்தி தத்துவ சால்புகளை, உருவேற்றி வழிபடும் முறைகளை, புரிந்து கொள்ளும் அளவிற்குப் போதித்தார். தெரிந்து கொள்வது வேறு; அறிந்து அனுபவிப்பது வேறு. புறப்படு! மனிதர்கள் பார்வையும் மூச்சும் படாத இடமே தவஞ் செய்வார்க்குத் தக்க இடம் என்று அறிவித்து, போகர் அகமுகம் ஆயினர்.

ஆசாரியரை வலம் வந்து வணங்கிய கொங்கணர், அப்போதே புறப்பட்டார். ஒரு மலையைக் கண்டார். அதன் உச்சியில் உள்ள பாறைமேல் ஏறிப் படுத்தார். மழையை வெயிலை மதித்திலர். நிமலையை நினைந்தார். நெடுந்தவம் புரிந்தார். பலகாலம் இங்ஙிலை.

காயம் முழுதும் கனன்றது. அளவிறந்த சக்திகள், விண் முழுதுமாகி விளையாடுகின்ற தெய்வ அற்புதம் தெரிந்தது.

சக்திகள் பலர், உயரும் முறைகள் பலவற்றை உணர்த்தினர். அவைகளை அறிந்தார். இருந்த இடத்தை விட்டு எழுந்தார். எதிரில் ஒரு சமாதி இருந்தது. கண்டார். கைகுவித்தார். விரிந்தது சமாதி. அதனில் இருந்து கௌதமர் வெளிப்பட்டார்.

அனித்தியமாம் ஆக்கை விழுமுன், அடியேன்
தனித்திருக்கும் ஞானத்தைத், தாராய்நீ தாராயே.

கொங்கணு ! இருந்த நிலை நீங்கி எழுந்தது ஏன் என்ருர். அஞ்சிய கொங்கணர், பழையபடியே தவத்தில் ஆழ்ந்தார். மற்ெருரு சமயம் கண்விழித்தார். குறிப்பாக, சக்திகள் கூறிய அரிய ஒரு வேள்வியை ஆரம்பித்தார். மீட்டும் விரிந்தது சமாதி. வெளியானுர் கவுதமர்.

தவம். அதன் வழி சிவம். வீண் சித்திகள் கருதி வேள்வியில் இறங்கினை! இதனுல், உள்ளொன்று புறமொன்ருன உலகர் உபத்திரவந்தான் உண்டாகும். அதனுல், கூடிய தவசக்தி குறைந்துவிடும் என்ருர். உடனே மறைந்தார்.

நொந்தது மனம். புனித கொங்கணர், அங்கிருந்து புறப்பட்டார். தல யாத்திரை செய்தார். அமைதி யுற்றது மனம். தில்லையை அணுகினுர். அன்று விட்ட வேள்வியை, மீட்டும் ஆரம்பித்தார்.

எதிர் நின்ருர் கெளதமர். கொங்கணர் மனம் அதிர்ந்தது. குறுநகை செய்தார் அந்தக் கெளதமர்.

கொங்கணு ! சித்திகளைப் பெருக்கச் சிந்தனை செய்கிருய். அத் தாபம் தவிர்ந்திலை. முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார். முன்னேறியவர்கட்கு முனைப்பு வரும். எச்சரிக்கையா யிரு! என்று சொல்லி மறைந்தார்.

நியம வேள்வி நிறைவேறியது. புகழும் புண்ணியமும் பொலிந்து வழிந்தன. சக்திகளால் பல சித்திகள் எய்தின. அவர்கள் அறிவித்த வழியாலும், போகர் அருளாலும், உயர்ந்த குளிகைகளை உருவாக்கினுர். அவைகளின் துணையால், நாடு முழுதும் நடமாடினுர். தகவுடைய சித்தர்களைத் தரிசித்தார். தேக தத்துவம், ஆன்ம தத்துவம், தெய்வ தத்துவம் முதலிய உள்பொருள் நுட்பங்களை உணர்ந்தார். அதிசய மூலிகை ரகசியங்களை அறிந்தார்.

மண்ணினைவு, பொன்னினைவு, மாதர் நினைவெழுந்து,
புண்ணுகிப் பொய்த்துமனம் போகா வணமருளே!

ஒரு சமயம், சித்தரான திருமழிசை ஆழ்வாரைச் சிந்தித்தார். ஒரு நாள் சந்தித்தார். அவரிடம் குளிகை ஒன்றைக் கொடுத்தார். இது, காணி கோடியைப் பேதிக்கும் என்றார்.

ஆழ்வார் நகைத்தார். தம்மிடத்தில் இருந்த ஒரு குளிகையை எடுத்தார். கொடுத்தார். இது, காணி கோடியை ஆக்கும் என்று, அந்தச் சித்தர் பரிபாஷையிலேயே அறிவித்தார். சுறுசுறுப்புடன கொங்கணர் அதைச சோதித்தார். ஆழ்வார் சொன்னது உண்மை யென்று அறிந்தார்.

கொங்கணரே! சித்தி என்பது பலவகை. சித்தித்தவைகளைக் கொண்டு விளம்பரம் செய்து கொள்வது விபரீத நிலை. வெற்றி உமது முயற்சியில் விளைவதாக எனறு, ஆசி கூறி அனுப்பினார். அங்கிருந்து கொங்கணர், புனித ஒரு வனத்துள் புகுந்தார். பெருமுயற்சி செய்தார். சாதனைகளைப் பெருக்கினா. இரும்பைப பொன்னாக்கினார். அவர் எணணியபடி யெல்லாம், செம்பு தளதள என்னும் தங்கம் ஆயின.

விளம்பரம் கூடாது எனறு ஆழ்வார் செய்த அறிவிப்பு, நினைவில் எழுந்து நிழலிட்டது. சாதனை விளைவுகளை சோதனையால் அறிந்த கொங்கணர், புதுக்கிய பொன கட்டிகளை, ஏரிகளில், கிணறுகளில், ஓடைகளில் எறிந்தார். மூலிகை நலஙகளை முழுதும் உணர, எங்கும் சஞ்சரிக்கலாயினர். பசி வந்தால் பிட்சை.

ஒரு நாள் ஏநதிய அவர் கைகளில், கொக்கு ஒன்று எச்சம் இட்டது. கனன்றது மனம். கொக்கை நோக்கினார். பக்கென்று அதுபற்றி எரிநதது. கடுந்தவக கனல், கண்ணில் கனன்றது. அதன் விளைவு இது என்று அறிந்தார்.

பிட்சைக்குப் புறப்பட்டார். வாசுகியுடன் திருவள்ளுவர், திருமயிலையில் வாழ்கிறார். உச்சிப் போது. வள்ளுவர் உணவு

உள்நோக்கும் பார்வை உள(வு)எனக்குக் கூறுகென,
அள்ளூறி வேண்டும் அடியனைக்கண் பாராயோ?

கொள்கிருர். உடனிருந்து வாசுகியார், கணவரை உபசரிக்கிருர்.

பசிக்குப் புசிக்க அன்னம் தேவை என்று, இருதரம் குரல் கொடுத்தார் கொங்கணர். வாயிலில் இருந்து வரும் அவ்வோசையை, வாசுகியார் கேட்டார். பதியின் பணியில் ஈடுபட்டு இருந்தமையால், சிறிது தாமதித்து, விரைந்து பிட்சையுடன் வந்தார். அலட்சியம் செய்தாள் என்று, ஆத்திரம் கொங்கணர்க்கு அதிகரித்தது வெறித்து நோக்கிஞர்.

கொங்கணரே! கொக்கென்று எண்ணினீரோ? கணவரிடம் கடமை யாற்றும் காரிகை நான்; மன்னித்துக் கொள்ளுங்கள் என்று வலம் வந்தார். பிட்சை யிட்டு வணங்கிஞர்.

அருந்தவர் மனம் அதிர்ந்தது. அம்மா! காட்டில் எரிந்தது கொக்கு; அதை வீட்டில் இருந்த நீர் எப்படி அறிந்தீர் என்ருர்.

ஸ்வாமி! அதை அறியேன் அடியேன். வாயில் வந்தது வரலாறு. இபபடி யறிந்தேன் என்று நான் எப்படிச் சொல்வேன்? என்ருள் அவ்வாய்மைத் திருமகள்.

இவள் பதிவிரதா தெய்வம்! இவள்முன் சினந்தது பிழை என்று, அங்கிருக்க அஞ்சி அகன்ருர்.

செல்லும் வழியில், தாய் தநதையரைப் பூசிக்கும் தர்மவிராதனை அறிந்தார். அவன் கொங்கணரைக் கண்டதும், ஓடி வந்தான். வீழ்ந்து பணிந்தான.

ஸ்வாமி! வாசுகியம்மை சுகமா என்ருன்.

அட! அங்கிருந்து வருகிறேன் என்பதை, எப்படி அறிந்தாயப்பா என்ருர்.

ஸ்வாமி! அவர் பதிபக்தி செய்யும் பதிவிரதை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று, அடியேன்

விண்ணுடி நீதான் விளங்குகின்ற கோலத்தைக்,
கண்ணாடிப் பார்க்க,நீ கண்ணருளைச் செய்யாயே!

உணர்ந்து ஒழுகுகிறேன். இந்த அனுட்டானத்தால், எங்கள் போன்றவர்கள் இடத்தில், மேலான ஏதோ ஒரு சக்தி மிதக்கிறது. அவ்வளவுதான். இப்போது அதற்கு மேல் சொல்ல நேரமில்லை என்று, பெற்றோர்கட்குப் பணி செய்யப் பெரிதும் விரைந்தான்.

கொங்கணர், சிறக்க அவன் கூறியவைகளைச் சிந்தித்தார். தன்னடக்கம் வேண்டும்; கடமை தவருமையும் வேண்டும். அவரவர் தர்மத்தை அவரவர்கள் அனுட்டித்தால், மாறுடத்தில் தெய்வ சக்தி மலர்கிறது என்று உணர்ந்தார். உள்ளம் உருகினர்.

இன்றுவரை முயன்று பெற்ற மூலிகைகள், குளிகைகள், ரசவாத வித்தைகளை, அனைவர்க்கும் சுலபமாக அறிவிக்க வேண்டும் என்று, அருள் மிகுந்து எண்ணினர். அதற்கென்றே, பல நூல்களை எழுதினர். அன்பொடு பலரை அணைத்தார். அவர்களோ, ஒருவர்க் கொருவர் பொருமையும் போட்டியுமாகப் பொங்கினர். இன்று நேசர், நாளை துவேஷர்; இன்று அடியவர், நாளை கொடியவர்; இன்று போற்றுவார், நாளை தூற்றுவார்; மனவெறி, இனவெறி, பிரிவினை ஆட்டம் போடுகிறது. உள்ளம் திருந்தினுல் ஒழிய, உலகம் திருந்தாது. மனம் திருந்தினு லொழிய இனம் திருந்தாது என்று, அனுபவத்தில் அறிந்தார்.

" உலகம் ஒக்காளம் என்று நீ ஊதேடா காளம் ?" என்று, தெரிந்து பாடியுளர் தெய்வ மேலவர்.

" தேரிழுக்க ஊரழைக்க மாரடித்தது எத்தனை ?" என்பவைகளை, உணர்ந்து நெஞ்சம் உடைந்தார்.

"ஆவாரை யாரே அழிப்பார் ? சாவாரை யாரே தவிர்ப்பார்.?" எப்படி யாயினும் இவர்கள் போகட்டும்; உருப்படுவார்க்கு, நமது நூல்கள் உதவட்டும் என்று எண்ணினர்.

சேற்றுப் புழுப்போல் செகத்தில் அழியா(து,)உன்
வீற்றுமலை நீழல், விளையாடல் என்றேயோ?

மனம் நொந்து புறப்பட்டார். போகரைக் கண்டார். போற்றி அவரைப் புகழ்ந்தார்.

கொங்கணவ! உன் செயல்களைத் தொடர்ந்து உணர்ந்துளம்; நம்மைப் பயன் படுத்திக் கொள்ள மக்கள் அறியார்; அது அவர்கள் தலைவிதி. நான உனக்குப் போதகாசிரியன்; உன் சகமாணவரான திருமாளிகைத் தேவரை, சரதகாசார்யனாகக் கொள்! பெருகிய அமைதி பிறக்கும் என்றார் அந்த அருந்தவர்.

அவர் குறிப்பறிந்த நம் கொங்கணர், திருமாளிகைத் தேவரிடம் சரண் அடைந்தார். தம் குருநாதர் குறிப்புணர்ந்த தேவர், கொஙகணர்க்கு, பல உள்புல நுட்பங்களை உணர்த்தினார்.

"ஆறு கோடி மாயா சத்திகள், வேறு வேறாக விரிந்துளர்." அவர்கள் அனைவரும், அநித்ய சக்திகள். ஓயாது தம்மை உணர்வார்க்கு, அவர்கள் உலக மோக போகங்களையே ஊட்டுவர்.

திருவருட் சக்தியை வழிபடில், சிவ யோக போகம் சித்திக்கும்; என்றும் இதனை எண்ணி யிரு! என்று, அதற்கான சமய, விசேட, நிருவாண தீட்சைகளை அவர்க்கு நிகழ்த்தினார்.

அதன்பின் கொஙகணர், அம்முறைகளைப் பலகாலம் அனுட்டித்தார்.

அம்பிகை உபாசகரான கொங்கணர், தம் பெயரால் ஒரு இலிங்கத்தைத் தாபிததார். வழிபட்டார். வளம் பெற்றார்.

ஒருசமயம், திருத்தணி எனும் தெய்வத் திருப்பதியை அடைந்தார். அங்கு எழுந்தருளிய வீராட்டகாச மூர்த்தியின் திருமுடியில், வளமான ஒரு குளிகையை வைத்தார். மாதேவர்,

---

வாசியெனும் மாடிமேல் வாழ்வார்கள், மெய்ப்பர
தேசியெனும் பேராளர் என்றதுவும் தேர்ந்தேனே.

அதை நீருக்காது மறைத்தார். அதிசயித்த கொங்கணர், அம் மூர்த்தியை நோக்கி, ஹரஹர என்று அழுது தொழுது அலமந்தார். அதன் பயனுக, வீராட்டகாசரிடம், அந்த அருமைக் குளிகையைப் பெற்று ஆனந்தித்தார்.

திருவேங்கடத்திற்குச் சென்ருர். அம் மலை, தவத்திற்குத் தக்க தலம் என்று அறிந்தார். அங்குத் தங்கினுர்.

அப்பக்கத்தில் ஒரு சிற்றரசன். அவன் பெயர் வலவேந் திரன். அவன் கொங்கணர் மாணவன் ஆயினன். மற்றவர் போல் ஆகாமல், பல சாதனைகளை அவரிடம் பயின்றனன்.

ஸ்வாமி! தாங்கள் செய்த நூற்கள் ஒவ்வொன்றும் அற்புதம் ஆனவை. அவைகளுடன், எளிய நடையில், பக்குவிகள் எளிதில் உணர, சாதனை அனுபவத்தை, கும்மி முறையில் குறித்தருளும் என்று, விநயம் கொண்டு அம் மன்னன் விண்ணப்பித்தான.

அவன் பொருட்டு, குறிப்புணருமாறு கொங்கணர் பாடிய கும்மியின் அருமை கோடி பெறும்; அதனையும், அவர் பாடிய மற்ற நூற்களையும், பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோல், அடுத்த இதழிற் சிறிது அனுபவிப்பம்!

வாழ்க சித்தர்கள் வழிமுறை.

ஓம்.

மச்சுவீடு கட்டி, மனங்குளிர வாழ்கின்ற
உச்சிதமெய்ஞ் ஞானியர்கள், ஓம்பொருள்கொண்
[டோங்குவரே.

அநுபூதி விளக்கம்

சிவசங்கர தேசிகன்

(கி. வா. ஜ.)

'மூன்று ஈஷணைகள் எப்போது போகும்?'' என்று ஏங்கிய அருணகிரியார் இப்போது முருகனை நினைக்கிறார். அவனை விளித்து இந்தக் கேள்வியைக் கேட்கிறார். 'எம்பெருமானே, குடிகளுக்கு உள்ள குறைகளைப் போக்குவது அரசன் கடமை. ஆதலின் தங்களுக்குக் குறைநேர்ந்தபோதெல்லாம் குடிமக்கள் கோவேந்தனிடம் முறையிடுவார்கள். நான உன் அருளரசாட்சியில் உயிர்வாழும் குடிமகன். எனக்கு அரசன் நீ; தலைவனும் நீயே. கோவாகிய உன்னை நோக்கிக் குடிமகனாகிய அடியேன் என் துன்பத்தை முறையிட்டுக் கொள்கிறேன்' என்று எண்ணிய அருணகிரியார்,

கோவே!

என்று அழைத்தார். அவன் சர்வப் பிரபஞ்சங்களுக்கும் பேரரசன்; இராசாதிராசன். உலகத்து மன்னர்களெல்லாம் 'முடிவில் ஒரு பிடிசாம்பராய் வெந்து மண்' ஆகிறவர்கள். முருகனோ என்றும் உள்ள நித்தியப் பொருள்; மாயாத மன்னன்; அழியாத அரசன்; தளராத தலைவன்.

தமிழ்நாட்டுப் பேரரசர்களின் சிறப்பைச் சொல்லும்போது, அவர்களுடைய பட்டத்துத் தேவிமார்களையும் இணைத்துச் சொல்வது மரபு. 'உலக முழுதுடையாளோடு சிங்காதனத்து இன்ன சோழன்' என்பது போல மெய்க்கீர்த்திகளில் வரும். பாடல்களிலும் ''செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ'' (புறநானூறு, 3) என்பது போலப் புலவர்கள் அமைத்துப் பாடுவார்கள். குமரக் கடவுளாகிய கோவைப் புகழவந்தவர் அவருடைய தேவியைப் பற்றியும் சொல்கிறார். தேவயானையும்

வாழ்வார், அறத்தால் வளர்வார், என்றும்
சூழ்வார் திருக்கோயில், சுற்றுவார் புண்ணியரே.

எம்பிரானுடைய தேவியாக இருந்தாலும், குறவாணர் வீட்டில் வாழ்ந்த ஒருத்தியையும் தேவியாகக் கொண்ட பெருங்கருணையை எண்ணிப் பக்தர்களும் புலவர்களும் பெரும்பாலும் முருகனை வள்ளி மணவாளன் என்றே சொல்வார்கள். வீட்டுக் காரியத்தைப் பார்க்கத தேவயானையை வைத்துவிட்டு நாட்டுக் காரியத்தைப் பார்க்க வள்ளியுடன உலா வருபவன் முருகன்

> "நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்எந்த நேரத்திலும்
> கோலக் குறத்தி யுடன்வருவான்"

என்று அருணகிரிநாதரே கந்தர் அலங்காரத்தில் பாடியிருக்கிறார். ஆகவே கோவுக்குரிய தேவியாக வள்ளியை நினைத்துப் பாடுகிறார்.

கோவே, குறமின் கொடிதோள் புணரும் தேவே!

'குறபபெண்ணாகிய வள்ளியின் தோளை அணையும் தேவா' என்கிறார். வள்ளிநாயகியைக் குறமின் கொடி என்று குறிப்பித்தார். திருமேனித் தேசினாலும் அலைசும் திறத்தாலும் மின்னுக் கொடியைத் தேவமகளிருக்கு உவமை கூறுவது வழக்கம். இங்கே வேறு ஒரு பொருத்தமும் உண்டு.

வள்ளிநாயகி திருமாலின் மகள். முருகனை மணந்து கொள்ள வேண்டுமென்று தவம் இயற்றியவள். மான் வயிற்றிலே தோன்றிச் சிலகாலம் குறவர்களிடம் இருந்து வாழ்ந்தாள். பிறகு முருகனுடன் சேர்ந்து கொண்டாள். மின்னல் ஒரு கணம் தோன்றி உடனே வானில் மறைந்துவிடும். அதைப் போலவே வள்ளி யெம்பெருமாட்டி சிறிதுகாலம் குறமகளாகத் தோன்றி மறைந்தாள். இந்தப் பொதுத தன்மையை எண்ணிக் குறமின்கொடி என்றார் என்றும் கூறலாம்.

கண்ணுறங்கும் போதெல்லாம், ஆன்மா அடைகதியை
எண்ணுகின்றார், சாக்கிரத்தில் எச்சரிக்கை யாயினரே.

ஈஷணாத்திரயத்தினால் அல்லல் உறுபவரை மீட்கவேண்டு மானால் அந்த ஆசையைக் கெடுக்க வேண்டும். அறியாமை யினால் உண்டாவது ஆசை. அறியாமையைப் போக்குவது அறிவு அல்லது ஞானம். ஞானம் கைவந்தவர்களுக்கு ஆசை இல்லாமல் ஒழியும். ஞானததை வழங்குபவர் குருநாதர்.

'மூவேடனை என்று முடிந்திடுமோ?' என்று ஏங்கும் இவர் அதனைப் போக்கும் தேசிகோத்தமனிடம் முறையிடுகிறார். வைத்தியர் வீடு சென்று அவரைப் பார்த்து, "மருத்துவ மணியே, என் நோய் எப்போது போகும்?' என்று அங்கலாய்ப் பவரைப போல இருக்கிறது இது. மூன்று ஈஷணைகளுக்கு மூலமாகிய அஞ்ஞானத்தை அழிக்கும் ஞானத்தை அருள் பவன் முருகன,

சுரத்தால் நடுக்கம் உண்டாகிறது. நடுக்கந் தீர வேண்டு மானால் சுரம் நீங்கவேண்டும். அது நீங்க மருந்து உண்ண வேண்டும். அதைத் தருபவர் வைத்தியர். இங்கே சுரத்தின் விளைவாகிய நடுக்கத்தைப் போன்றமை ஈஷணாத்திரயம். சுரத்தைப் போன்றது அஞ்ஞானம். மருந்தைப் போன்றது ஞானம். மருந்தை வழங்கும் மருத்துவனைப் போன்றவன் முருகன். அவன் ஞானம் வழங்கும் தேசிகன். மிகப்பெரிய மன்னர்களுக்கெல்லாம் வைத்தியம் செய்தவர் என்று மருத்து வரின் பெருமையைச் சொலவதுண்டு. அதுபோல இந்தத் தேசிகன் மிகப் பெரியவர்களுக்குக குருநாதனாக இருப்பவன் என்று சொல்கிறார். முருகன் சிவபெருமானுக்கே குருநாதனாக விளங்குபவன்; அவன் சிவசங்கரனுக்குத் தேசிகன். 'நீ சிவ சங்கரனுக்கே தேசிகனாக இருப்பவனாயிற்றே! உன்னை அண்டி னால் என அறியாமை நீங்க, ஈஷணைகள் மூன்றும் ஒழியும் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறேன்' என்பாரைப் போல,

---

பசியறிந்து பாலூட்டும் பாக்யவதி போ(ல்,)ஆன்மச்
சிசுவின் அகப்பசி,நீ தீர்க்கும்தாய் ஆயினையே.

சிவசங்கர தேசிகனே!

என்கிறார். 'நீங்கள் பெரிய டாக்டர் ஆயிற்றே! இந்த எளியேனுடைய நோயைப் போக்கலாகாதா?' என்று முறையிடும் நோயாளியின் நிலையில் நின்று பேசுகிறார் அருணகிரியார்.

பாட்டு முழுவதையும் பார்க்கலாம்.

மாஏழ் சனனம் கெடமா யைவிடா
மூவே டணைஎன் றுமுடிந் திடுமோ?
கோவே, குறமின் கொடிதோள் புணரும்
தேவே, சிவசங் கரதே சிகனே!

[அருளாணையினாலே என்னைக் காக்கின்ற பேரரசனே, குறவாணரிடையே மின்னலைப் போலே சில காலமிருந்து பிறகு உன்னோடு இணைந்த வள்ளிதேவியின் திருத்தோளை அணையும் தேவா, சிவசஙகரனுக்கே குருவாக உள்ள பெருமானே, பெரிய ஏழு பிறவிகள் கெடும்படியாக, மாயையின தொடர்பை விடாத மூன்று ஈஷணைகள் எப்போது என்னிடமிருந்து ஒழியுமோ?

மூவேடணை - தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை என்னும் மூவகைப் பற்றுகள். முடிதல் - அழிதல். குறமின் கொடி - வள்ளி நாயகி.]

கந்தர் அநுபூதியில் 39-ஆவது பாடல் இது.

வாய்விட் டழுகின்ற சேய்தன்னை, வாரிக்கொள்
தாய்போல்நீ, என்ஏக்கம் தானுணர்தல் நிச்சயமே.

ஒற்றுமை உயர்வுதரும்

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

[அன்பன்]

(23) கோக்களைக் காத்தவர் கோபாலர்; காளையைக் காத்தார் கண்ணுதலார்.

(24) கண்ணற்ற கைடபனை வதைத்தான் கண்ணன். கடிய அந்தகனைக், கால் தட்டிய காலகாலர் சிவபெருமான்.

(25) வேணு கானம் செய்தார் கண்ணபிரான்; வீணு கானம் செய்தார் சிவபெருமான்.

(26) சத்தியர் நாரணர்; சத்திய நித்தியர் சங்கரர்.

(27) சகாதேவன் அன்பில், கட்டுப்பட்டார் கண்ண பிரான்; அன்பர்கள் உளத்தில் அருந்தளைப் பட்டார் சிவபெருமான்.

(28) அர்ஜுன சகாயர் கண்ணபிரான்; அவனுக்குப் பாசுபதம் தந்தவர் பரமேசர்.

(29) விஷ்ணு என்பது, திருமாலின் திருப்பெயர்; விஷ்ணு வல்லபர் என்பது சிவனுர் நாமம்.

(30) மக்கள் செல்வன் எனும் பொருளில், ஜனுர்த் தனர் ஆயினர் திருமால்; மக்கள் இளைப்பைத் தவிர்ப்பவர் எனும் பொருளில், சஙகரர் ஆயினர் சிவபெருமான்.

(31) அமரரைக் காக்கும் அரசர் ஆயினர் நாரணர்; அவர்கட்கு உரிய அந்தணர் ஆனுர் சிவபெருமான்.

(32) சிவபக்தரான அகததியர், கடலைப் பருகி அதன் கர்வம் அடக்கினர். கடலின் அணைகட்டி, அதன் செருக்கை யடக்கினர் இராமபிரான்.

(33) உலகைப் படைக்கும் பிரமனை உதவினர் திருமால்; அப்பிரமதேவர், சஙகரர் தேரின் சாரதி யாயினர்.

பருவப பசியுடலைப் பாதிக்கும்; ஞானப்
பருவப் பசியிலுயிர் பாதுகாப் பெய்தும்மே.

(34) அவிநாசியில், முதலை உண்ட பாலனை, காலம் பல கழிந்தும், அதன் வாய்வழியே வெளிவர அருளினார் சிவபெருமான். இறந்த ஒரு அந்தணர் மக்களை, இயம லோகம் சென்று மீட்டுக் கொடுத்தார் கண்ணபிரான்.

(35) ஒரு மலையைக் குடையா ஏந்தினன் கண்ணன்; ஒரு மலையை வில்லாக வளைத்தார் சிவபிரான்.

(36) தானம் செய் மாபலிக்கு, தனிபபதம் அளித்தார் நாரணர்; தருமம் செய் குபேரனை, தனபதி யாக்கினர் சங்கரர்.

(37) புன்னை நிழலில், புன்னகை புரிந்தான் கண்ண பிரான்; வடவால் நிழலில், மோனக் குறுநகை விளைத்தார் சிவனார்.

(38) திருமண்ணை நெற்றியில் தரித்தார் அச்யுதர்; நீற்றை நெற்றியில் அணிந்தார் நின்மலர்.

(39) கோபாலர் யாவரும் கோவிந்தனைச் சூழ்ந்தனர்; அவர்களே சிவத்தைப் பலகாலம் ஆராதனை புரிந்தனர். இது பாகவதத தீர்ப்பு.

(40) திருமகளை மார்பில் வைத்தார் திருமால்; பார்வதியாரை, பாதித் திருமேனியில் பதியக் கொண்டார் சிவபிரான.

(41) ஆஞ்சநேயரால் பல அருஞ்செயல் செய்தான் இராகவன்; இநதிரன் மூலம், எண்ணிறந்த நற்செயல் நடத்தினர் நம்பர்.

(42) இராம நாதர் என்பெயர் என்றார் சிவபிரான்; நானே இராமன் ஆகிய நாதன் என்கிறார் நாரணர்.

(43) பயனுன அரஙகத்தில் பள்ளி கொண்டார் பரந்தாமர்; அரிய அரங்கில் ஆடுகின்றார் நடராஜர்.

காலம் உணர்ந்து, கட்டறுக்க எண்ணுமென்றன்
சீலம்மெய் யாமேல், சிவமாக்கிக் கொள்ளுதியே!

(44) பாண்டவர்க்காத் தூதுசென்ருர் கண்ணபிரான்; சுந்தரர்க்காகத் தூது போயினுர் சிவபெருமான்.

(45) வாசுதேவர் நாரணர்; மாதேவர் சிவபிரான்.

(46) அடி இரண்டால் விசுவம் அளந்தார் நாரணர்; விஸ்வாந்தர்யாமி என்று விளங்குகிருர் சிவபிரான்.

(47) தரணியை அகழ்ந்து காத்தார் தாமோதரர்; அதைத் தன் தேர்ச் சக்கரம் ஆக்கினர் சிவபிரான்.

(48) மயில் பீலி யணிந்தார் கண்ணபிரான்; மயிலே ஊர்தி ஆக்கினன் சிவகுமரன்.

(49) பலமுகம் ஆயினர் பரந்தாமர்; அறுமுகம் ஆயினர் சிவபெருமான்.

(50) சக்கரம் முதலிய ஐந்து ஆயுதர் நாரணர்; பரசு முதலிய ஐந்து படையினர் சிவபிரான்.

(51) சாபம் தவிர்ப்பது இராமன் திருவடி; சங்கடம் தவிர்ப்பது சிவனுர் திருவடி.

(52) சிவனுர் கரத்தில் உருத்திர வில்; இராமன் கரத்தில் கோதண்டம்.

(53) முப்பதம் உடையவர் முகுந்தர் என்பர்; அதே செய்தி சிவனுர்க்கும் அமைந்துளது.

(54) கற்கிமுகி யாயினர் நாரணர்; யானைமுகர் ஆயினர் சிவதநயர்.

(55) திருமால் புதல்வர் நான்முகர்; சிவனுர் குமரர் அறுமுகவர்.

(56) மறைகளைப் பிரமனிடம் அளித்தார் மாதவர்; பயனுன அவ் வேதங்களைப் பரிகளாக நடத்துகிருர் சிவபிரான்.

கேணிபோல் ஆழக் கெடுபிடியாம் ஞாலத்தில்,
வீணிற் பிறந்தேன்; வேதனைகள் எய்தினனே.

(57) நரகனைக் கொன்றார் நாரணர்; சிவநாமம் கூறு நர்க்கு, என்றும் நரகம் இல்லை என்பர்.

(58) பலிச் சக்கரவர்த்தியிடம் யாசித்தார் பரந்தாமர்; பக்தர்களிடம் பிட்சை கேட்கிறார் சிவபிரான்.

(59) குளிர்ந்த தாமரை ஏந்தினர் நாரணர்; வெப்பக் கனலை ஏந்தினர் சிவபிரான்.

(60) கீதை அருளினர் கண்ணபிரான்; சிவ கீதை அருளினர் சிவபிரான்.

(61) பார்த்தனுக்குத் தேர் செலுத்தி, வெற்றி யளித் தார் பரந்தாமர்; அவனுக்கு சிவாஸ்திரம் அருளி ஆக்கம் அளித்தார் சிவபிரான்.

(62) உபமந்யு முனிவரிடம், கண்ணபிரான் உபதேசம் பெற்றார்; உமையாள் குமரனிடம் அது பெற்றார் சிவபிரான்.

(63) தருமம் தாங்கிய சிவபிரானை, தானும் தாங்கினர் நாராயணர்.

(64) பூதிமான் திருமால்; விபூதிமான் சிவபிரான்.

(65) காயத்திரியின் உயிர் நாரணர்; உயிர்க்கு உயிர் சிவபிரான்.

(66) யாகம் ஆயினர் நாரணர்; யாக அதிபதி யாயினர் சிவபெருமான்.

(67) ஓம் என்பது சிவ சொரூபம்; அதனுடன் ஏழெழுத்து இயைவது நாரண ரூபம்.

(68) நாரணர் தங்கை உமாதேவி; சிவனார் தங்கை லட்சுமி.

(69) சிவனார் மைத்துனர் நாரணர், சிவகுமரார்க்கு மணத்தில் இரு மகளிரை அளித்தார்.

ஆர்க்கின்ற வாழ்க்கை அலங்கோலச் சூழ்நிலையில்,
மார்க்கம் அறியேன், மதிமயங்கி நின்றேனே.

(70) பிரமன் மகளிர்கள், மாபெரும் கணபதியை மணந்து கொண்டனர்.

(71) சிவம் என்பது மங்கலம்; மங்கலை மஞ்ஞளர் நாரணர்.

இப்படி எண்ணிறந்த ஒற்றுமைகள், இன்னும் ஏராளமாக இருக்கின்றன. ஓதுவம்; உணர்வம்; உள்ளம் நெகிழ்வம். சைவர் வலப்பாலர்; வைஷ்ணவர்கள் இடப்பாலர். இருவரும் கலந்தால் இன்பம் பிறக்கும்.

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

நீதியும் பாசமும்

[ஆ. கி. ரங்கராஜன்]

நீதியும் பாசமும் இணைந்ததே அறநெறியாகும். நீதி என்பது யாதெனில், பாரபட்சமற்ற தன்மையே யாகும். நமக்குப் பல குழந்தைகள் இருப்பாராயின், அனைவர் பாலும், ஒரே அளவில் அன்பு செலுத்துதலும், பெரியோர்களிடமும், தெய்வத்தினிடமும் ஒரே வித பக்தி செலுத்துதலும், செய்நன்றி மறவாமலிருத்தலும், இதுபோன்ற நன்னெறிகளும் நீதி எனப்படும்.

பாசம் என்பது பிரியம், பற்று, அபிமானம் என்ற பொருள் படுவதோடு, பிணிப்பு, பந்தம் எனவும், ஒருவகை ஆயுதத்தின் பெயராகவும் கூறப்படும். இங்கு நாம் ஆராயப் புகுவது முதலில் குறிப்பிட்டவற்றையேயாம்.

உறவினர்களோ, நண்பர்களோ நம்மிடம் தவறு செய்தால், மன்னித்து விட்டுக் கொடுப்பது பாசம் எனப்படும்.

மார்க்கம் தவறி மயங்கும் மரக்கலம்போல்,
மூர்க்கனாய் வீழாமல், முன்னின்று காத்தருள்வாய்.

நெற்றிக் கண்ணைத் திறந்தாலும், குற்றம் குற்றமே என்று நக்கீரர் தீர்ப்பளித்தது எது என்று கூறத் தேவை யில்லை. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பது 'கொன்றை வேந்தன்' என்னும் ஔவையார் நூலின் வாக்கு. இது, பாசத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். துரியோதனன் கர்ணனை மனமார நேசித்தான். அவன் தன் மனைவியைக் கர்ணன் பிடித்திழுத்ததை நேரில் கண்ட போதும் அவன் மீதிருந்த அபிமானத்தினால் அச்செயலை அவன் குற்றமாகப் பாவிக்கவில்லை. அதே போன்று, பற்பல குற்றங்களைத் துரியோதனன் தெரிந்தே தமக்குச் செய்திருந்தும், தரும புத்திரர் சகோதர பாசத்தினாலும், அபிமானத்தாலும் அவற்றினை மன்னித்து விட்டுக் கொடுத்தார்.

தீயோரைக் கண்டனம் செய்து நல்லோரை ஆதரித்து, நீதியை நிலை நிறுத்தவே அவதரித்த இறைவனாகிய கண்ணன், பாண்டவர்களுக்கெனத் துரியோதனாதியர்பால் தூது செல்லப் புகுமுன் தர்மரை சந்தித்தபோது, தருமபுத்திரர், எப்படியாவது சமரசமாகப் பேசி முடித்து வருமாறு கூற, கண்ணன் அவரை நோக்கி, "யுதிஷ்டிர! நீதியின் வழி செல்லும் நீ பாசத்தினால் கட்டுண்டு தவிக்கின்றாய்! மன்னிக்கத் தக்க குற்றங்களைப் பாசத்தின் காரணமாக மறந்து விடலாம். எண்ணற்ற குற்றங்களைத் துரியோதனன் உங்களுக்கு இழைத்திருக்கின்றான். உங்கள் ஐவரையும் அடியோடு அழிக்கத்தக்க சதிகளெல்லாம் செய்தனன். உயிரை ஒரு பொருட்டாகக் கருதாத நீங்கள், அதற்கெல்லாம் மன்னித்து விடலாம். ஆனால் உயிரினும் மானமே பெரிது. அம்மானத்தையும் அவன், உங்களிடமிருந்து அழிக்கத் துணிந்தான்.

"நீதியும் பாசமும் உன்னிடம் உள்ளவை. ஆனால் இவ்விரண்டும், உங்கள்பால் அவனுக்கு சிறிதும் இல்லை. ஆதலின்

இல்லாற்றில், நாளும் இழிவாற்றில் தேய்கின்ற
சொல்லாற்றில் நின்றோர், சுகமுறுவ தென்றேயோ?

அவனைத் தண்டித்தலே நீதியாகும். பாசத்தையே எப்போதும் கருதினால், நீதி எப்போது நிலைபெறும்? ஆதலின் நீதிக்குப் பின் பாசம் என்பதையே நீ கருதுக! குற்றத்திற்குத் தகுந்த பிராயச்சித்தம் சிறிதேனும் இல்லையாயின், மேன்மேலும் குற்றங் கள் பெருகும். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. அதனைக் கருதியே, இன்று யான் அவன்பால் தூது செல்கின்றேன்" என்று கூறிச் சென்றார். கண்ணனைத் துரியோதனன் மதிக்க வில்லை. அவரிடமே குற்றங்கள் புரிந்தான். அதன் விளைவு? மகா பாரதப்போர் மூண்டது.

நீதிக்குப் பின் பாசம் என்பதே வெற்றி கண்டது. கர்ணன் துரியோதனுக்காக உயிரைவிட்டு நீதியைக் காத்தனன். பாண் டவர்கள் ஐவரும் தனது சகோதரர்கள் என்று உணர்ந்த பின், அவர்களுள் எவர் மீதும் துன்புறுத்தும் போரைச் செய்யா தொழிந்தனன். இதனால் அவனது பாசம் வென்றது. அவனது நீதிக்கும் பாசத்திற்கும் வியந்த கண்ணன் அவனுக்கு சங்கு சக்ரதரனாகத் தரிசன மளித்து முக்தியை வழங்கினார்.

விதுரர், கௌரவர் பாண்டவர் இருதரப்பினரையும் சம நோக்கில் கண்டார். அவரிடம் நீதியும் பாசமும் இணைந் திருந்தன. இரு தரப்பினரும் ஒற்றுமையாக இருப்பதே நீதி என்று கருதினார். அதனைத் துரியோதனன் பயன் படுத்திக் கொள்ளாமல் அவரை நிந்தித்தனன். பாண்டவர்கள் அழியவே வேண்டும் என்று கருதிய அவன் செயல்களால் அவர் மன முடைந்து, 'அநீதி நிகழும் இடத்தை விட்டு' அகன்று, தீர்த்த யாத்திரை சென்றார். அவர் திரும்பி வரும்போது அறநெறி நிலைநாட்டப் பெற்றது. பாண்டவர்களின் மீது அவர் வைத் திருந்த பாசம், நேர்மையான நீதி இணைந்த அபிமானம் வெற்றி கண்டது.

நித்தம் பிறந்திறந்து, கின்னடியை எண்ணியதால், செத்துப் பிறக்காத சிவமானார் பல்லோரே.

மதுரை மா நகரை ஆண்ட இராணி மங்கம்மாள், கொடிய குற்றம் புரிந்த தம்பியைத் தண்டித்த செய்தியை ஆராயு மிடத்து, அவர் நீதிக்கே முதலிடம் வைத்து, மக்கள் அனைவரை யும் சமமாகப் பாவித்து அரசுபுரிந்ததை அறிகின்றோம்.

பாம்பு கொடியது. ஆனால் அதனைக் கொல்லுவது நீதியா. நீதியன்றுதான. வழிதவறி வநத பாம்பு வீட்டுக்குள் இருப்ப வரைத தீண்டிவிடககூடும் எனபதற்காக அதனைக் கொன்று விடுகின்றோம். இச சமயத்தில் எதையும் ஆராய நேரமிருப்ப தில்லை. ஆனால் காட்டு வழிகளில் சஞ்சரிக்கும் பாம்புகளை யெல்லாம் கொல்வது நீதியனறு. பரீக்ஷிதது மனனன சமீக முனிவரின கழுத்தில ஒரு இறநத பாம்பை இட்டு அவமதித்த குற்றத்திற்காக நேர்ந்த சாபத்தின் விளைவாக தட்சகன, பரீக்ஷித்து மன்னனைத் தீண்டிக கொனறனன். அதனை ஆராயந்தறியாமல் பரீக்ஷித்துவின் மகன் ஜெனமேஜெயன் சர்பப யாகத்தை செய்து உலகிலுள்ள சர்பப வர்க்கத்தையே அழிக்க முறபட்டான். இந்திரன புத்திமதி கூறி அதனைத் தடுத்தான்.

சாதாரண மக்களாகிய நாம் தவறான செயலகளைச செய் யாமலும், தவறான சொறகளைச சொல்லாமலும், தவறான எண்ணஙகளைக கொளளாமலும் இருந்தாலும் போதும். எவர்பாலும நல்லெண்ணத்தையும், உயிர்களபால் பாசத்தை யும் கொணடு ஒழுகினால் போதும. இதனையே திருவள்ளுவர் பினவரும் குறளில உணர்த்துகிறார்.

செயத்தக்க அல்ல செயக்கெடும், செயத்தக்க
செய்யாமை யானும் கெடும்.

நாம் எப்போதும் தவறான காரியங்களைச் செய்தாலும், செய்யத தகுநத காரியங்களைச செய்யாதொழிந்தாலும் அத னால் விளைவது துனபமேயாம். இதனை உணாந்து நாம், ஒவ் வொரு நாளும் ஒவ்வொரு கணமும் நமது கடமைகளாகிய உத்தமத் தொழிலகளையே கருதி ஒழுகுதல் எனும் நீதியையும், இறைவனபாலும் பெரியோர்பாலும் மாறாத பகதி எனற பாசத் தையும் கொணடு, நமது செயல்களால நமது சந்ததியாருக்கும் நல்ல வழிகாட்டிகளாய் இருந்து இறைவனருளுககுப் பாத்தி ரர்களாவோமாக!

THE ETERNAL WAR

The body of every human being is a chariot pulled by five steeds. The steeds are of mighty power and none but the most dexterous can control them. They pull in all contrary directions with such ferocity that one almost fears that they will do away with the chariot. Untrained stallions just captured from the woods, are the most dangerous to yoke to a new chariot. The five senses of man answer to the steeds. There is one charioteer who can control and drive them along the proper pathway and land the jiva, the owner of the chariot, in his proper place of Nityananda. Krishna is the chaioteer. Arjuna is the soul of man to be saved. Entrust your body to His care, and you will reach the destination. Remember every human body is the seat of a great war—an eternal war between the forces of light and darkness, dharma and adharma, good and bad, Pandavas and Duryodhanas. Where Lord Sri Krishna is, there is victory. Where Lord Muruga is, there is victory. Hence throw yourself at the feet of the Lord and secure Him as your ally. Yours then is the victory. That is the message of the Maha-

bharatha and the Skandapuranam. The five senses are described as beautiful milk cows by the Siddhars, but, with the common man they cannot be controlled, and they roam about in a fury spelling destruction. If you entrust them to some good cowherd who knows to control them, they will milk in pitchers of nectar and they will become the blessedness of the land they live in. So described the Siddhars. Sri Krishna the charioteer is equally the most reliable cowherd. Even so, he is called Govinda, Lord Siva is Pasupati—the Lord of pasus. Every Jiva is a pasu—a go, and the pasu's Lord is Pasupati, Govinda Himself. To think of Him and to sing of Him is the easiest, the surest means of attaining His grace. Mount the Lord in this mind and be blessed. This is true Bhakti and the way to win the war of life.

—Thiruppugal Mani

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	நபை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருப்புகழ்மாலை (360 பாடல் மட்டும்).	...	1	25
கநதக்கதம்பம் (பாடலமட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுபபவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆபபிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிஙகுகள், போஸ்டல் ஆர்டராக அனுபபலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும், வருட நடுவில் சநதாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

பொய்வண்ணம் மனத்தகற்றிப், புலனைந்தும் செலவைத்து,
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்ந்நின்ற வித்தகனை,
மைவண்ணக் கருமுகில்போல், திகழ்வண்ண மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனை, யான் கண்டது தென் அரங்கத்தே.

No. 1506 ASOKA

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி
ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami 3 Bunder Street Madras-1.